www.tamilarangam.net
தந்துதவியவர்: தேசம்நெற்


# தமிழோசை

THAMIZHOSAI


உள்ளே....


* ஒரு வீதிக்கு வந்த..
* எதுவரை தொடரும்..
* லண்டனில் நடனம்
* மூன்று கவிதைகள்
* சொல்லாரம்-2



ஓசை : 1
ஒலி : 12
ஆங்கீரஸ ஹூ கார்த்திகை மீ 5ந் திகதி (20-11-1992) 253 Western Avenue London W3 0PP Tel: 44-(0)81-993 7652 Fax: 44-(0)81-993 8611


## கொழும்பில் தற்கொலைத் தாக்குதல்:

# கடற்படை தளபதி மரணம்

(நமது கொழும்பு நிருபர்)

கடந்த திங்கட்கிழமை பட்டப் பகலில் கொழும்பின் முக்கிய வீதியில் கடற்படைத்தளபதி கிளன்சி பெர்னாண்டோவை கொன்றதன் மூலம் தமிழீழ விடுதலைப்புலிகள் தாங்கள் எங்கேயும் எப்போதும் தாக்க இயலும் என்பதை வெளிப்படுத்தியுள்ளார்கள்.

மோட்டார் சைக்கிள் தற்கொலைத் தாக்குதலில் கடற்படைத் தளபதி, கிளன்சி பெர்னாண்டோ, அவரது மெய்க்காவலர் வீரபாகு, சாரதி ஆர்.எல்.பெரேரா ஆகியோர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

லெப்ரினன் சந்து குணசேகரா காருக்கு வெளியால் தூக்கி எறியப் பட்டு காயமடைந்தார். கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டபின்பு இவரும் மரணம் அடைந் தார்.மோட்டார் சைக்கிள் சாரதி ஸ்தலத்திலேயே துண்டுகளாக சிதறி னார்.

இந்தச் சம்பவம் 16ம் தேதி திங் கட்கிழமை காலை 8.30 மணியளவில் காலிமுக மைதானத்திடலில் தாஜ் சமுத்திரா ஹோட்டலுக்கு முன்பாக நடந்தது.கடற்படைத் தளபதி தமது லோங்டன் பிளேஸ் இல்லத்திலிருந்து கொழும்பு கோட்டையிலுள்ள கடற் படைத் தலைமையகத்துக்கு செல் கையில் நடைபெற்றது. கடற்படைத் தலைமையகம், சம்பவம் நடந்த இடத்திலிருந்து அரை மைல் தூரத் திற்குள் தான் அமைந்துள்ளது, என்பது குறிப்பிடத்தக்கது.


கொழும்பில் கிடைத்த அறிக்கை யொன்றிடின்படி, மோட்டார் சைக் கிள் சாரதி சுப்ரமணியம் யோக மோகன் வயது 22, மூர்த்தி றோட், தையிட்டி, காங்கேசன்துறையைச் சேர்ந்தவர் என்று அடையாளம் காணப்பட்டதாக அறியப்படுகிறது. சம்பவம் நடந்த இடத்தில் பாதி உருக்குலைந்த நிலையில் காணப் பட்ட வாகனம் ஓட்டுவதற்கான அனுமதிப்பத்திரத்தை வைத்து இந்த விபரங்கள் திரட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.கடந்த புதன் கிழமை இவரது படம் எல்லாப் பத்திரிகைகளிலும் முன் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இவர் கடந்த மூன்று மாதங்களாக புறக்கோட்டை பகுதியில் ஒரு வெளியார் விடுதியில் தங்கியிருந்த தாகவும் இவர் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிள் கம்பகாவில் ஒரு விநியோகஸ்தரிடம் வாங்கி யுள்ளார் என்றும் அறிக்கை தெரி வித்தது. விடுதி உரிமையாளர் இப்போது தடுப்புக்காவலில் இருக் கிறார்.

டென்சில் கொப்பேகடுவ, மற்றும் எட்டு காவல் படையினரும் மாண்ட மூன்றாவது மாத நினைவுதினம் அநுஷ்டித்து ஒரு வாரத்துக்குள் நடந்த கடற்படைத் தளபதியின் மரணம் காவற்படை வட்டாரத்தில் பெரிய அதிர்ச்சியைக் கொடுத் துள்ளது.

53 வயதான கிளன்சி பெர் னாண்டோ 1957ம் ஆண்டு மார்கழி மாதம் கடற்படையில் சேர்ந்து இலங்கையில் 11வது தளபதியாக 1991ம் ஆண்டு நவம்பர் முதலாம் தேதி பொறுப்பேற்றார். இவரது 35வது வருட சேவையை இன்னமும் ஒரு மாதத்தில் பூர்த்தி செய்திருப் பார். அத்தோடு ரஞ்சன் விஜேரத் தினாவுக்கு அடுத்தபடியாக கொல் லப்பட்ட மிகப் பெரிய அதிகாரி இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பாக்குநீரிணையில் இந்திய கடற் படையோடு கூட்டுச் சேர்ந்து விடு தலைப்புலிகளின் கடல் நடமாட் டத்தைக் குறைப்பதற்கான முயற்சி களை இவர் முன்னின்று நடத்தினார். இதனால் மாதகல் போன்ற புலி களின் தளங்கள் தாக்கப்பட்டதும், சமீபத்தில் பல இந்தியப் படகுகள் எரிபொருட்கள் கொண்டு வந்த போது,கடற்படை அவையை கைப் பற்றி மன்னாருக்குக் கொண்டு சென்றதும் தெரிந்த சில சம்ப வங்கள்.



பெர்னாண்டோ மீது நடந்த இந்தத் தாக்குதல் கடற்படையை மட்டுமல்லாது பாதுகாப்புப் படைகளின் மனோதிடத்தை கலங்க வைத்துள்ளது. போரில் மாண்ட, காயப்பட்ட, ஓடிப் போனவர்களின் எண்ணிக்கை பத்தாயிரத்துக்கு மேல் கூடி விட்டபோதில் புதிய ஆட்சேர்க்கும் பணிக்கு இந்தச் செய்தி எந்த வகையிலும் சாதகமாக இருக்க முடியாது.

நாட்டினதும், தலைநகரினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி பிரேமதாசா அரசாங்கத்தினது கையாள்வுகள் பற்றி அரசியல் வட்டாரங்களில் மிகுந்த அவ நம்பிக்கை எழுந்துள்ளது.

கொழும்பில் புதன்கிழமை தொடங்கிய "எக்ஸ்போ- 92" கண் காட்சி வெளிநாட்டவர்களுக்கு இலங்கை எந்தவித கொந்தளிப்பும் இல்லாது பாதுகாப்பான நாடாக இருக்கிறது என்று சுட்டிக்காட்டி

(11ம் பக்கம் பார்க்க)

## அன்னை திரேசாவுக்கு கௌரவம்



(நமது நிருபர்)

மனித குலத்திற்கு செய்யும் சேவையை மெச்சியும், ஒடுக்கப்பட்ட துன்பப்படும் ஏழை மக்களுக்கு செய்து வரும் தொண்டைப் பாராட்டியும், அன்னை திரேசா விற்கு, இந்திய ஜனாதிபதி டாக்டர் சங்கர் தயாள் சர்மா, டெல்லியில் ராஷ்ரபதி பவானில் கடந்த வாரம் 'பாரத சிரோன்மணி' என்ற விஷேட பட்டத்தைக் கொடுத்து கௌரவித் தார்.

ஏழைகளுக்கு சேவை செய்வ திலும், தேவைப்படும் மக்களுக்கு நல்லவற்றை கொடுப்பதிலும், மனுக் குலத்திற்கும் இறைவனுக்கும் பணி புரிவதிலும், உள்ள அர்த்தமுள்ள வாழ்வை, பலர் புரிந்து உணர்ந்து வருவதாகக் கூறும் அன்னை திரேசா, பிளவுபட்டு கிடக்கும் இவ்வுலகில் சக மனிதருக்கு செய்யும் சேவையே, அமைதிக்கான ஒரு சூழலை உருவாக்கும் எனவும் கூறினார்.

### சிறிநிவாசன் பிரேரணை

## தமிழ் கட்சிகள் நிராகரிப்பு

(நமது நிருபர்)

யாழ் மாவட்ட, ஈழத் தேசிய ஜனநாயக முன்னணி, பாராளுமன்ற உறுப்பினர் சிறிநிவாசன் கணபதிப் பிள்ளையின் 9 அம்சத் திட்டம், ஏழு கட்சி கூட்டமைப்பைச் சேர்ந்த அரசியல் கட்சிகளிடையே பர பரப்பை உண்டாக்கியுள்ளது. இத் திட்டம், பல கட்சிகளினதும் கவ னத்தை ஈர்த்துள்ளதாக தெரிய வருகிறது. வடக்கு கிழக்கில் இரு வெவ்வேறு மாகாணசபைகளுக்கு முழு அதிகாரமுள்ள ஒரு ஆளுநர் கொண்ட, ரெலோவின் பிரேரணை சென்ற வாரம் சமர்ப்பிக்கப்பட் டமை தெரிந்ததே. ஆனால், ரெலோவின் பிரேரணைகளையும், சிறிநிவாசனின் பிரேரணை களையும், தமிழர் ஐக்கிய விடுதலைக் முன்னணி, ஈழப் புரட்சி அமைப்பு, தமிழீழ மக்கள் விடுத லைக் கழகம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சிகள், "ஏழு கட்சி கூட்டமைப்பின் வடக்கு கிழக்கு இணைந்த 4 அம்சத் திட்டத்தையும் தமிழ் ஒருமைப் பாட்டையும் குலைக்கும் பிரேரணைகள் இவை" என்று கூறி நிராகரித்துள்ளன.

ரெலோ பிரேரணையின்படி இனங்களுக்கிடையிலான விகிதா சாரம் 1953க்கு முன்னர் இருந்தமாதிரி பேணப்படுவதாக ஆலோசனை கூறப்பட்டது அறிந்ததே. சிறிநிவா சன் பிரேரணையில் சிங்கள குடியேற்றங்களை குலைக்காமல், 1971க்கு முன்னைய விகிதாசாரத்தை பேணுவதற்கு ஆலோசனைகள் கூறப்பட்டிருந்தன.

பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கருத்துத் தெரிவிக்கையில் இது ஒரு நல்ல மாற்றுத் திட்டம் போல தோற்றினாலும், புத்தபிக்கு களும், சிங்கள வாதிகளும், 'சமஷ்டி' என்ற பதம் இரு வெவ்வேறு நாடு கள் என்ற அடிப்படைக் கருத்தைக் கொண்டிருப்பதாகவும், இந்த மாதிரி அமைப்பு யூகோஸ்சியாவில் தோல்வி கண்டது எனவும் கூறி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என வும் கூறினார்.

பாராளுமன்ற தெரிவுக்குழு, அடுத்த வாரம் கூடும்போது இப் பிரேரணைகளைப் பற்றி ஆலோசிக்கவிருப்பதாக தெரிகிறது.

லண்டனிலிருந்து வெளியாகும் அனைத்துலக தமிழர் பத்திரிகை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

காலஞ்சென்ற முன்னாள் சிறைச்சாலை உத்தியோகஸ்தர் (Prison Guard) காசி.நாகலிங்கத்தின் மருமகனும் யாழ்ப்பாணத்தின் வெளிவாரிப்பட்டப் படிப்பு நிறுவனங்களின் பிரபல பொருளியல் துறை விரிவுரையாளரான

**உயர்திரு**

## நாகேந்திரம் கிருஷ்ணானந்தன்

*B.A Hons, B.Phill Hons*




**தோற்றம்: 10.01.1951** **மறைவு: 12.11.1988**

வஞ்சமற்ற நெஞ்சமுடன்
வையகத்தில் வாழ்வு பெற்று
தஞ்சமென எமக்கிருந்த
தலைவரே! உம் உயிரை
வஞ்சகத்தில் காலனவன்
கவர்ந்ததனால் நாமெல்லாம்
நெஞ்சம் பதைபதைத்து
நெடுதுயிர்த்து நிற்கின்றோம்.

**உம் ஆத்மா சாந்திக்காய் எங்கள் கரமேந்தி இறைவனிடம் வேண்டுகின்றோம்.**

உங்கள் பிரிவால் துயருறும், மனைவிராஜேஸ்வரி(இந்தியா), மகள் கல்பனா(இந்தியா), அம்மா, மாமி, சகோதரர்கள்:திரு.திருமதிடாக்டர்நந்தபாலன்(அவுஸ்திரேலியா), திரு.திருமதி மங்கையர்கரசி சிவானந்தன்(பாரீஸ்), திரு கமலகாந்தன்(லண்டன்),திருமதிபவானிஅரவிந்தன்(நோர்வே). மைத்துனர்கள்:திரு.திருமதிஅன்னராஜா(அன்னராஜாஅன்கோ, திரு.திருமதிசற்குணராஜா(சற்குணராஜாஅன்.கோ.யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம், மனோகராதியேட்டர்பங்குதாரர்), திரு.திருமதி குலேந்திரராஜா(கனடா), திரு.திருமதிஅரசரத்தினராஜா(கனடா), திரு.சண்முகராஜா (Shan பேர்லின்).

# ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு 6.6.1967 உதிர்வு 3.12.1991

## செல்வன் கனகசிங்கம் விஜயகுமார்

கரவெட்டி

லண்டன் பல்கலைக்கழக (Kings College) பொறியியல் பீட மணவன் அண்ணாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி 21.11.1992 லண்டன் Highgate முருகன் ஆலயத்தில் மோட்ச அர்ச்சனையும் அபிஷேகமும் பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும்.

அன்றையதினம் உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் பூசையிலும் மத்தியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைகிறோம்

இப்படிக்கு

அம்மா, அப்பா, அண்ணா, தங்கையர், மைத்துனர்

1,Ajax Court
Colindale Avenue
London NW9 5EU

SUNRISE RADIO

**24 hr RADIO STATION**

**1413 KHz 212 MW**

**தமிழ் ஒலிபரப்பு**

23.11.92
10.00. - 11.00மணி

*செய்திகள்
*ஈழத்துப் பாடல்கள்
*வாழ்த்துவோம்
*சமூகப் பலகணி - உங்கள் பகுதி
நேரடி - தொலைபேசி கேள்வி - பதில் நிகழ்ச்சி (புதிய அகதிகள் சட்டமும் தொடர்ந்து வரவிருக்கும் சட்டவிதிகளும்)
பரிஸ்டர் - ஜோசப்

'தமிழோசை' வாசகர்களிடமிருந்து சிறுகதைகள், கவிதைகள், கட்டுரைகள் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புகளை அனுப்பும்போது தங்களுடன் ஒரு பிரதியை வைத்திருக்கவும்.

கலாஷேத்ரா - புகழ் **ஸ்ரீ.ஜே.வெங்கடசலாபதி,**

**செல்வி.லூட்மிலா வின்டலன் உடன்**


**இணைந்து வழங்கும்**

# பரதநாட்டிய நிகழ்ச்சி

**FRIDAY 4th DECEMBER, 1992 AT 8.00 P.M. (DOORS OPEN 7.15 P.M)**

**SURBITTON ASSEMBLY HALL**
MAPLE ROAD, SURBITON, SURREY

(**Directions:** Off A3 - Tolworth Roundabout, Ewell Road towards Kingston - Corner of Surbiton Rd and Maple Rd)





**ஸ்ரீ.ஜே.வெங்கடசலாபதி**, இந்தியாவில் ஆந்திரப் பிரதேசத்தில் குச்சுப்புடி எனும் கிராமத்தில், ஒரு கலைக்குடும்பத்தில் பிறந்தவர். இசையும், நடனமும் இவரின் இரத்தத்தோடு ஒன்றியவை. **கலாஷேத்ரா**வில் நடனக் கலையில் பட்டம் பெறும்போது உயர் சித்தியுடன் தேர்ச்சியடைந்த இவர், **ஸ்ரீமதி ருக்மணிதேவி**யின் கீழ், பதினைந்து வருடங்களாக, நடனக் கலை விரிவுரையாளராக பணியாற்றியுள்ளார்.

மாணவனாக இருந்த போதும், விரிவுரையாளராக இருந்தபோதும், ஸ்ரீமதி ருக்மணி தேவி தயாரித்த நாட்டிய நாடகங்கள் பலவற்றில் முக்கிய பாத்திரமேற்று இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் நடனமாடிய வெங்கடசலாபதி, பரத நாட்டியத்திலும், குச்சுப்பிடியிலும், பல தனி நடனக் நிகழ்ச்சிகளையும் நிகழ்த்தியுள்ளார்.


1975இல் இந்திய அரசு வெங்கடாசலாபதி, 'குச்சுப்புடி' நடனமாடும் தோற்றத்தில் ஒரு முத்திரை வெளியிட்டு இவரை கௌரவித்துள்ளது. (இம்முத்திரையை படத்தின் கீழ் மூலையில் காண்க.) **சங்கீத நாடக அகடாமி**யின் பல கௌரவமான, பாண்டித்திய சலுகைகளையும் மூன்று வருடங்களுக்கு பெற்றவர்.

**பக்கவாத்தியங்கள்**
ஸ்ரீ.பி.சீதாராம் சர்மா - பாட்டு
ஸ்ரீ.என்.கே.கேசவன் - மிருதங்கம்

**நிகழ்சித் தொகுப்பு**
- ஸ்ரீ.விமல் சொக்கநாதன்

நுழைவுச்சீட்டு: **£ 3.00** (12 வயதிற்குட்பட்டோர்)
**£ 5.00**
**£ 10.00**

விபரங்கட்கு: **081 769 6297 (பகல்)**
**081 677 5497 (மாலை)**
**081 767 1323 + 081 570 6034**



**லூட்மிலா வின்டலன்**
திருமதி சுபத்ரா சிவதாசனின் மாணவி

**தமிழோசை**

**சந்தா படிவம்**

தமிழோசை பத்திரிகையை அஞ்சலில் பெற கீழ்க்காணும் விண்ணப்பத்திரத்தைப் பூர்த்தி செய்து அதற்கான பணத்தையும் காசோலையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ அனுப்பி வைக்கவும்
(Please mark Cheques or Postal Orders Payable to **"THAMIZHOSAI"** )

**Name:** ____________________

**Address:** ____________________
____________________
____________________
____________________

**Postcode:** ____________________

**Phone No:** ____________________

| | UK / EUROPE | OTHER COUNTRIES |
|---|---|---|
| **12 Issues** | **£ 7.00** | **£ 15.00** |
| **24 Issues** | **£ 12.00** | **£ 30.00** |

Please send this form to
Circulation Dept.
**THAMIZHOSAI**
253 Western Avenue,
London W3 0PP
UNITED KINGDOM



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரதமர் மீது பொலீஸ் விசாரணை

அவுஸ்திரேலிய பிரதமர் கீற்றிங், ஒரு ஓவியர் வேண்டுகோளிற்கு இணங்கி இரண்டு ஐந்து டாலர் பணநோட்டின் மீது கையொப்பமிட்டு அவலட்சணப்படுத்தி விட்டதாக போலீஸ் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

நிருபர்கள் கேள்விக்குப் பதிலளிக்கையில் தான் பணநோட்டை அவலட்சணப்படுத்துவதற்காக கையொப்பமிடவில்லை; ஆனால் பிரதமர் கையொப்பத்தால் அதனுடைய மதிப்புக் கூடும் என்பதற்காகவே அப்படி செய்ததாக கூறினார்.

பிரதமர் பிரித்தானிய மகாராணியின் படத்துடன் ஐந்து டாலர் நோட்டு அச்சிடப்படுவதை அங்கீகரிக்கவில்லை. இவர் அவுஸ்திரேலியா பிரித்தானிய ஏகாதிபத்தியத்தில் அங்கமாக இருப்பதை விரும்பாதவர். நோட்டு அச்சிடப்படுவதை தடுக்க இவர், றிசேவ் வங்கியுடன் பகிரங்க விவாதத்தில் ஈடுபட்டார். பாராளுமன்றத்தில் இதையிட்டு கேள்வி எழுப்பினார்.

பொலீசார் ஓவியரின் வீட்டைச் சோதனையிட்டபோது ஓவியரையோ அல்லது பண நோட்டுக்களையோ கண்டு பிடிக்க முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்தின் பின் மகாராணியின் படத்துக்கு கொம்பு, தாடி, மீசை வைத்துப் பல ஆயிரக்கணக்கான நோட்டுக்கள் பாவனையில் இருக்கின்றன.

ஆனால் ஓவியரோ இந்த இரண்டு நோட்டுக்களையும் தலா £1350க்கு விற்க இருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அவுஸ்திரேலிய பணநோட்டுச் சட்டப்படி கீற்றிங் குற்றவாளியாக காணப்பட்டால் £2,250 அபராதத் தொகை அல்லது இரண்டு வருட சிறைத்தண்டனையும் கிடைக்கும்.

# இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு

## -அரசு வருந்தியழைப்பு

(நமது நிருபர்)

இலங்கை பாதுகாப்புப் படைகளில், பொருட்பலத்தை விட, ஆட்பலம் மிகவும் பலவீனமடைமந்த அரசிற்கு யுத்தத்தை தொடர பெரும் நெருக்கடியை தோற்றுவித்துள்ளது.

10,000 பேர் கொண்ட புதிய படையணி ஒன்று, உடன் நிறுவப்படவுள்ளதாகவும், இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாகவும், பாதுகாப்பமைச்சு அறிவித்துள்ளது.

இவ்வருட முற்பகுதிகளில், இத்தகைய முயற்சிகள், அரசு எதிர்பார்த்தளவு வெற்றியளிக்காது, மிகவும் குறைந்தளவிலேயே ஆட்சேர்ப்பு இடம்பெற்றது, குறிப்பிடத்தக்கது. இரு வருடங்களின் முன்னர் இராணுவத்தில் சேர்ந்து கொள்ள, ஆயிரக்கணக்கில், சிங்கள இளைஞர்கள் திரண்டிருந்தது நினைவிருக்கலாம்.

இம்முறை அதிகளவு இளைஞர்களைத் திரட்டும் நோக்குடன், விண்ணப்பத்திற்கான கல்வித் தகைமையை, ஜீ.சி.ஈ சாதாரண தரத்தில் இருந்து 8ம் வகுப்பாகக் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி கல்வியைத் தொடர முடியாதவர்களும், பாடசாலை மாணவர்களும் இராணுவ சேவைக்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள். இத்தகைய நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது.

வட, கிழக்கில் தொடரும், தாக்குதல் அழிவுகளும், பொலீஸ், ஊர்காவற் படைகளில் இருந்து பல நூற்றுக்கணக்கானோர், முன்னறிவித்தலின்றி விலகித் தலைமறைவாவதும், படைபலத்தை ஆட்டி வருகிறது.

தற்பொழுது சுழற்சி முறையில் வட,கிழக்கிலும், பொலீஸ் குறைந்தது 6 மாதங்கள் பணிபுரிய வேண்டும் என்ற பணிப்புரையையும் அரசு அறிவித்துள்ளது. இதன்படி ஒழுகத் தவறுவோர், தாமாக பதவி விலகியோராகக் கணிக்கப்படுவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை– முஸ்லீம்களிற்கான தனிப்படைத்திட்டம் நிராகரிக்கப்பட்டுள்ளதாகவும், நாட்டின் அனைத்து பகுதிகளில் இருந்தும் சகல இன மக்களும், படைகளில் சேர்த்துக் கொள்ளப்படுவர் என்றும், இலங்கை கூட்டுப்படைத் தலைமை பேச்சாளர் கூறியுள்ளார்.

# பெண்கள் மானபங்கம்!

## காடுகளில் பாதுகாப்பு தேடும் அவலம்

மட்டக்களப்பு மாவட்ட ஆயித்தியமலை கிராம மக்கள், இரவு நேரங்களில், வீடுகளை விட்டு காடுகளில், பாதுகாப்பு தேடி ஒதுங்கும் அவல நிலைக்கு ஆளாகியுள்ளனர்.

தொடர்ச்சியான பல இன்னல்களுக்கு ஆளாகி வந்த இக்கிராமம் அண்மைய சில வாரங்களாக சற்று அமைதியடைந்திருந்தது.

இக்கிராமத்தின் வடக்கே புதிதாக அமைக்கப்பட்ட இாணுவ முகாமில், இருந்து அண்மைய நாட்களாக தொல்லைகள் ஆரம்பித்தன. இரவு நேரங்களில் காக்கிச் சட்டையில், பச்சை மேலங்கி அணிந்த கோஷ்டி ஒன்று, ஆயித்தியமலை கிராமத்தினுள் புகுந்து விசாரிப்பதாக கூறி, வீடுகளில் உள்ள இளம் பெண்களுடன் தகாத முறையில், அங்க சேஷ்டைகள் புரிவதை வழமையாக்கியுள்ளனர்.

இத்தொல்லைகளைப் பொறுக்க முடியாத பீதி கொண்ட மக்கள் இதுபற்றி, இராணுவ முகாமில் புகார்கள் தெரிவித்தும், இந்நடவடிக்கை கட்டுப்படுத்தப்படவில்லை. மாறாக சேஷ்டைகள் கட்டுமீற ஆரம்பித்துள்ளன.

இதிலிருந்து, இராணுவ ஆசீர்வாதங்களுடன் இக்கோஷ்டி செயல்படுவதை புரிந்து கொண்ட மக்கள், தற்காப்பைத் தேடிக் கொள்ள, இரவுகளை காடுகளில் கழிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். குறிப்பாக– இளம் பெண்களைக் கொண்ட குடும்பங்கள், காட்டு விலங்குகளைப் பொருட்படுத்தாது மனித விலங்குகளிடமிருந்து, மானத்தைக் காக்க, இருள்படியமுன்னே, வீடுகளைக் காலி செய்து காடு நோக்கி சென்று விடுவராம்.

கடந்த 10ம் தேதி இரவு வேளை வீடொன்றினுள் புகுந்த இக்கோஷ்டியினரால் இரு இளம் பெண்கள் மானபங்கப்படுத்தப்பட்டுள்ளனர். மேலும், 14ம், 15ம் தேதிகளில் இக்கோஷ்டியால் ஒரு ஆணும், 3 இளம் பெண்களும் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.இவர்கள் நிலை பற்றி தெரியவரவில்லை. இச்சம்பவத்தைத் தொடர்ந்து கடத்தப்பட்டவர்களின் குடும்பத்தவர் உட்பட பலர், அக்கிராமத்தை விட்டு, அருகில் உள்ள வீச்சு கல்முனை என்ற பகுதிக்கு இடம்பெயர்ந்துள்ளனர். முடிவிற்கு கொண்டு வரப்படாத இவ்இராணுவ ஆசீர்வாத கோஷ்டியின், அடாவடித்தனங்கள், கேட்பாரற்று தொடர்கின்றன.

# 500வது ஆண்டு நிறைவு - அவமானமானது

## -சமாதானத்திற்கான, நோபல் பரிசு பெற்ற பெண் கருத்து.

இந்த ஆண்டு சமாதானத்துக்கான நோபல்பரிசு, ரகோ பெர்டா மென்ஞ்சு என்ற பெண்ணுக்கு கிடைத்திருக்கிறது.

தங்களின் அடிப்படை உரிமைகளுக்காக போராடும் மக்களுக்கும், அமெரிக்காவிலுள்ள கறுப்பினமக்களுக்கும் அளிக்கப்பட்ட கௌரவமாக இதைக் கருதுவதாகக் கூறும் இவர், குவாட்டமாலா நாட்டின் இராணுவ ஆட்சியைத் தூக்கியெறிய போராடிய கொரில்லா இயக்கத்தைச் சேர்ந்தவர், என ஆட்சியாளர்களால் குற்றஞ்சாட்டப்பட்டவர். பதினொரு ஆண்டுகளாக, புகலிட வாழ்வை, மெக்சிக்கோவில் மேற்கொண்டு, தனது நடவடிக்கைகளை மேற்கொண்டவர் இவர்.

தெற்கு, மற்றும் மத்திய அமெரிக்க நாடுகள் பலவற்றைப் போலவே, குவாட்டமாலாவிலும், அந்நாட்டு மக்களுக்கும், ஐரோப்பாவிலிருந்த குடியேறியவர்களுக்கும் இடையில் சச்சரவு நீடித்திருந்துள்ளது. 1970–80ம் ஆண்டுகளில் நாட்டில் கடும் பதட்டநிலை தோன்றியது. குவாட்டமாலாவின் பூர்வ குடிகள் நசுக்கப்பட்டனர்.



இவர்களின் உரிமைக்கான போராட்டத்தில், பங்கு கொண்டு பாடுபட்டவர் மெனஞ்சு.

அமெரிக்காவுக்கு ஐரோப்பியர்கள் வருகையின் 500வது ஆண்டு நிறைவு கொண்டாடப்படும் வேளையில் இவருக்கு இப்பரிசு கிடைத்திருக்கிறது. இது பற்றி இவர் சொல்வது:

“வட, தென் அமெரிக்க ஐரோப்பிய அரசுகள் பலவும் லத்தீன் (தென்) அமெரிக்காவின் 500 ஆண்டு கால முன்னேற்றத்தை, வளர்ச்சியை 1992ம் ஆண்டு பெரிய அளவில் கொண்டாடுகின்றன. சுதேசி மக்கள் என்ற முறையில் நாங்கள் கேட்கும் கேள்விகள் என்ன தெரியுமா? எத்தகைய வளர்ச்சி எத்தகைய முன்னேற்றம்? அவை யாருக்காக? 500வது ஆண்டு விழா (கொலம்பஸ் அமெரிக்காவை கண்டு பிடித்து 500வது ஆண்டு) வானது இரு உலகங்களும், இரு கலாச்சாரங்களும் சந்திக்க வாய்ப்பளிக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆரம்பத்திலிருந்தே சுதேசி மக்கள் மீது ஐரோப்பியர்கள் பெற்ற வெற்றி என்பதே உண்மையாக இருக்கையில் ‘சந்திப்பு’ என்றெல்லாம் கூறுவது எவ்வளவு அவமானமானது?”.

# தமிழ்க் கவிஞர்களுக்கு ஒரு வேண்டுகோள்

(நமது நிருபர்)

தமிழ் நாட்டில் புதுவை அரசினால் ஏற்படுத்தப்பட்ட ஆய்வு மையமான, புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், மேற்கொண்டு வரும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்தின் கீழ், எல்லாவகையான தமிழ்க் கவிதைகளையும் திரட்டி, கணிப்பொறியின் துணையோடு நிரல்படுத்தி பாதுகாக்க விழைகிறது. சிறந்த மரபுக் கவிதைகளையும், புதுக்கவிதைகளையும் பொருள் மற்றும் வடிவ அடிப்படையில் வகுத்து ஒரு தெளிவான புதிய- வடிவ- உள்ளடக்க கோட்பாட்டின் அடிப்படையில் தொகை நூல்களாக வெளியிடும் இலக்கையும் இந்நிறுவனம் கருத்தில் கொண்டுள்ளது.

இந்த நூற்றாண்டின் எந்த ஒரு தமிழ்க் கவிதையும், கவிதைத் தொகுப்பாய்வுத் திட்டத்திலிருந்து விடுபடக் கூடாது என்பதில் மேற்படி நிறுவனம் கருத்தாகவும், கவனமாகவும், இருந்து வருகிறது. எனவே, தமிழ்க் கவிஞர்களும், இலக்கிய ஆர்வலர்களும், தாம் இதுவரை வெளியிட்டுள்ள கவிதைகளையும், தம்மிடம் நூல்வடிவில் உள்ள கவிதைகளையும், இத்திட்டத்திற்கு வழங்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

கவிதைகளை இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், 19, சின்ன சுப்பராயப் பிள்ளை வீதி, புதுச்சேரி 605001 (இந்தியா) என்ற முகவரிக்கு விரைந்து அனுப்புமாறு உலகெங்கிலுமுள்ள தமிழ்க் கவிஞர்களை, இந்நிறுவனத்தின் இயக்குனரான இரா. கோதண்டராமன் கேட்டுக் கொள்கிறார்.

# பாரீசில் இலக்கியச் சந்திப்பு

(நமது நிருபர்)

எதிர்வரும் டிசம்பர் மாதம், 26, 27ஆம் தேதிகளில் பாரீஸில் நிகழும் 14வது இலக்கியச் சந்திப்பில், புகலிட வாழ்வு, இலக்கியம், ஓவியம், மாசுபடும் சூழல், தமிழ் நாடக அரங்கு, நாட்டுக்கூத்து,பெண்ணியம் போன்ற பல விடயங்களில் கருத்துப்பரிமாறல்களும், கவியரங்கு, நாட்டுக்கூத்து ஆகியனவும் இடம்பெறவுள்ளன.

முதல்நாள் காலை திரு கலைச்செல்வன் தலைமையில், புகலிடச் சஞ்சிகைகள், பத்திரிகைகள் குறித்து வாசகர் கலந்துரையாடலும், திரு கே.கே.ராஜா தலைமையில், திரு. மு.நித்தியானந்தனின் ‘தமிழ்நாடக அரங்கு - அங்கும் இங்கும்’ என்ற சிறப்புரையும் இடம்பெறவுள்ளன. மதியபோசனத்தையடுத்து பேராசிரியர் சி.சிவசேகரம் தலைமையில் ‘ஐரோப்பிய இலக்கியங்களும் நாமும்’ எனும் தலைப்பில் ஜேர்மன் இலக்கியங்கள் தொடர்பாக ந.சுசீந்திரனும், பிரெஞ்சு இலக்கியங்கள் தொடர்பாக க.கலாமோகனும், டச்சு இலக்கியங்கள் தொடர்பாக ஆர்.பத்ம மனோகரனும் உரையாற்றுவர். மாலையில் ‘புகலிட வாழ்வும் பெண்களும்’ எனும் தலைப்பில் திருமதி.ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தலைமையில் ஜெயந்தி சாம்சன், ரதி, லஷ்மி ஆகியோர் பங்குபற்றுவர். அதைத்தொடர்ந்து ஓவியர்கள் சாம்சன், கணேசராஜ், தேவதாஸ், சிவநாதன் ஆகியோருடைய ஓவியக்கண்காட்சியும், ஓவியர் கே.கே.ராஜாவின் சிறப்புரையும் இடம்பெறும். அன்றைய தினம் இரவு நிகழ்ச்சிகளில் திரு சார்ள்ஸ் தலைமையில் நிகழும் கவியரங்கில் அருந்ததி, வாசுதேவன், அ.கருணாநிதி, சுகன் ராகவன், வ.ஐ.ச.ஜெயபாலன், கௌசல்யா சொர்ணலிங்கம் ஆகியோர் பங்குபற்றவுள்ளனர். இறுதி நிகழ்ச்சியாக ‘நாட்டுக்கூத்து’ ஒரு பார்வை எனும் தலையங்கத்தில் திரு.எஸ்.அகஸ்தியர் உரையாற்றுவார்.

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகளில் ‘மனிதனும் மாசுபடும் சூழலும்’ பற்றி டாக்டர் ஆர்.ஸ்ரீதரன் தலைமையில் நிகழும் கருத்தரங்கில் கலாநிதி எஸ்.பத்மமனோகரன், திரு வ.ஐ.ச.ஜெயபாலன் பேராசிரியர் சிவசேகரம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர். தொடர்ந்து சேரனின் ‘எரிந்து கொண்டிருக்கும் நேரம்’ கவிதைத் தொகுப்பு வெளியீடும், தமிழ் மக்களின் கலாச்சாரச் சிதைவு’ எனும் தலைப்பில் ரி.செல்வக்குமாரின் உரையும் ‘பிரெஞ்சுப் புரட்சியும், சமகால இலக்கியங்களும்’ எனும் தலைப்பில் திரு.வாசுதேவனின் சிறப்புரையும் இடம்பெறும். திரு.எஸ்.சபாலிங்கம் தலைமையில் மாலை நிகழும் ‘கவிஞர்கள் பார்வையில் கவிதைகள்’ என்ற நிகழ்ச்சியில் ஆறு கவிதைத் தொகுப்புகள் பற்றி வெவ்வேறு கவிஞர்கள் உரையாற்றவுள்ளனர்.

கௌரியின் ‘அகதி’ ஆனந்த பிரசாத்தின் ‘சுய தரிசனங்கள்’, அ.கந்தசாமி மலையன்பன், ரதனின் ‘காயத்தின் பதிவுகள்’, ரஜீன்குமாரின் ‘இருபதாம் நூற்றாண்டின் ஈழத்துப் புறநானூறு’, செல்வத்தின், ‘கட்டிடக் காட்டுக்குள்’, சிவசேகரத்தின் ‘தேவி எழுத்தாள்’, அருந்ததியின் ‘இரண்டாவது பிறப்பு’ ஆகிய கவிதைத் தொகுப்புகள் பற்றி முறையே, கௌசல்யா சொர்ணலிங்கம், சுகன், நிருபா, சுசீந்திரன், அருந்ததி, வ.ஐ.ச.ஜெயபாலன், சிவசேகரம் ஆகியோர் கருத்துரை வழங்குவர். இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய இணைப்புக் கொள்கையான ‘மாஸ்ரிச்ட்’ பற்றி கலாநிதி பத்மமனோகரன் தலைமையில் பேராசிரியர் சிவசேகரம் உரையாற்றுவார். இறுதி நிகழ்ச்சியாக வட்டுக்கோட்டை நாட்டுக்கூத்து அபிவிருத்திக் குழுவினரின் ‘அருச்சுனன் தபசு’ நாட்டுக்கூத்து இடம்பெறும்.

ஐரோப்பாவில் வெளிவந்து கொண்டிருக்கும் சஞ்சிகைகளின், ஆசிரியர்கள், ஆக்கதாரர்கள், வாசகர்கள் மற்றும் இலக்கிய விரும்பிகள் பலரும் ஒன்றாகச் சந்தித்து தமது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளும் முகமாக, நான்கு ஆண்டுகளாக தொடர்ந்து நடைபெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் இங்கிலாந்து, பிரான்சு, ஜேர்மனி, நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளிலிருந்து கலை இலக்கிய ஆர்வலர்கள் கலந்து கொள்கின்றனர்.

இந்நிகழ்ச்சி நடைபெறும் மண்டபத்தில் ஐரோப்பாவில் வெளிவரும் சஞ்சிகைகளும், பத்திரிகைகளும், ஏனைய வெளியீடுகளும் பார்வைக்கும் விற்பனைக்கும் வைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள விரும்புபவர்கள், இம்மாதம் 30ஆம் தேதிக்கு முன்னர், கீழ்க்காணும் விலாசத்தில் அமைப்பாளர்களைத் தொடர்பு கொள்ளலாம்.

ASSEAY, 3, Allee Paul Leautaud, 95200 SARCELLES., FRANCE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திச் சரம்

11.11.92

## விமானங்கள்வேவு

வடக்கு இலங்கையில், யாழ் சுண்ணாகம், மல்லாகம், அளவெட்டிப் பகுதிகள் மீது, விமானப் படை விமானங்கள் தாழப் பறந்து வேவு பார்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டன. மற்றொரு பாரிய தாக்குதலிற்கு அவை திட்டமிடுவதாக அச்சமடைந்த அப்பிரதேச மக்கள் ஆயிரக்கணக்கில், வேறிடங்களிற்கு நகர்ந்துள்ளனர்.

அதேவேளை- சுழிபுரம், மாதகல், சித்தங்கேணி வடலியடைப்பு போன்ற பகுதிகளில், இரவுவேளைகளில் கடலில் இருந்து, தொடர்ச்சியாக ஏவப்படும் ஷெல் வீச்சுகளிற்கு அஞ்சி- மக்கள் தினமும் இரவுகளை அயல்க் கிராமங்களில் கழித்து காலையில் வீடு திரும்புகின்றனர்.

## 4மாநிலங்கள்கூட்டு

இலங்கைப் போராளிகளிற்கு எதிராக கூட்டு நடவடிக்கை மேற்கொள்ளவும், நடமாட்டங்கள், நடவடிக்கைகள பற்றி- அறிந்து பகிர்ந்து கொள்ளவும், ஆந்திரா, கர்நாடகா, கேரளா, தமிழ்நாடு ஆகிய 4 மாநிலங்களும், உடன்பாடு செய்து கொண்டுள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ்.பி.சவான் அறிவித்துள்ளார்.

12.11.92

## இயற்கையின்சீற்றம்

மட்டக்களப்பு மாவட்ட கரையோரப் பகுதிகளை குறிபார்த்த கடும் சூறாவளியும், வெள்ளப் பெருக்கும், பலத்த சேதங்களை உண்டு பண்ணின. 13 பேர் கொல்லப்பட்டு, பலர் படுகாயமடைந்து, பல லட்ச ரூபாய் சொத்தழிவும், விளை நிலங்கள் நாசமடைந்துள்ளதோடு, பத்தாயிரத்திற்கு மேற்பட்டோர் வீடு வாசல்களை இழந்து அகதிகளாகினர்.

## கடலில்கைது

தமிழ் நாடு இராமேஸ்வரத்தில் இருந்து தலைமன்னாரிற்கு, பெற்றோல், டீசல், கிறீஸ், பட்டரி போன்ற பொருட்களை கொண்டு செல்ல முயற்சித்த இரு தமிழ் இளைஞர்கள், இலங்கை கடல் எல்லையில், படைகளால் கைது செய்யப்பட்டு, பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

13.11.92

## மத்தியஸ்துவம் செய்யதயார்

இலங்கையின் வடக்கு- கிழக்கு இனப்பிரச்னையில், மத்தியஸ்துவம் வகிக்க தமது அரசு தயாராக உள்ளதாக அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சர், அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் கூறியுள்ளார். சமாதான தீர்வை எட்ட, பொதுநல அமைப்புகளுடாக முயற்சி செய்ய வேண்டும் என்றும், கூறிய அவர், அண்மைய பொலநறுவை பொதுமக்கள் படுகொலைகளிற்கு தமிழ்ப் போராளிகளே காரணம் என்றும் தெரிவித்துள்ளார்.

## யுத்தநிறுத்தத்திற்கு ஆதரவு

இலங்கையில், பேச்சுவார்த்தை அறிகுறி தென்படாமல், நீடிக்கும் யுத்தத்தால், அழியும் மனித உயிர்களை கருத்திற் கொண்டு, உடன் யுத்த நிறுத்தம் மேற்கொண்டு, பேச்சுவாரத்தைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென அவுஸ்த்திரேலிய தமிழர் ஒன்றியம் இரு தரப்பினர்க்கும் அழைப்பு விடுத்துள்ளது.

14.11.92

## தலைநகரில்தேடுதல்

வடக்கில் இருந்து, பாரிய குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ள- விடுதலைப்புலி உறுப்பினர் சிலர், கொழும்பு சென்றுள்ளதாக தகவல் கிடைத்தது என்று அறிவித்து, தமிழர்கள் செறிந்து வாழும் கொழும்புப் பகுதிகளில், போலீசார் தீவிர தேடுதல் நடாத்தினர்.

பல இளைஞர்கள் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டதாகவும், 4 முக்கிய விடுதலைப்புலிகள் இனம் காணப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## தீர்விற்கு, ஆலோசனைக்குழு

இலங்கை இனப்பிரச்னை தீர்வு குறித்து ஆராயும், பாராளுமன்ற தெரிவுக் குழுவிற்கு நிபுணத்துவ உதவி வழங்குவதாக, கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர், ஜி.எல்.பீரிஸ், டாக்டர் ஜெயதேவா, உயன்கொட ஹொரா- ஹான் எதிரிசிங்க ஆகியோர் கொண்ட தொழில்நுட்பக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. இக்குழு தனது முதல் நடவடிக்கையாக, கொழும்பில் உள்ள தமிழர் அமைப்புகளுடன் தனித்தனியாக பேச்சுக்களை ஆரம்பித்துள்ளது.

15.11.92

## தமிழர்வீடுகள் முற்றுகை

திருகோணமலையில், மூதூர்- சாம்பல்தீவு மற்றும் அதனைச் சூழவுள்ள கிராமங்களில், திடீரென புகுந்த சுமார் 1000 அரசபடைகள், வீடு வீடாக தேடுதல் நடாத்தினர். 90ற்கு மேற்பட்ட இளைஞ யுவதிகளை விசாரணைக்காக கொண்ட சென்ற படைகள், சிலர் தவிர்ந்த ஏனையோரை மறுநாள் விடுவித்தனர்.

## படைகளால் தொழிலாளர்அவதி

இந்திய இழுவைப் படகுகளின் ஊடுருவல் காரணமாக மன்னார் பிரதேச மீனவர்கள் நடுக்கடலில் மீன்பிடிக்கச் செல்ல முடியாது அவதிப்படுவதாகவும், மன்னாரில் படைகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளில், விவசாயிகள், விவசாயம் செய்ய இயலாத நிலையில் பாதிப்புறுவதாகவும், மன்னார் துயர் துடைப்புச் சங்கம், புனர் வாழ்வு அமைச்சரிடம் புகார் தெரிவித்துள்ளது.

16.11..92

## நிற்கவைத்துதேடுதல்

மட்டக்களப்பு- களுவன் கேணி கிராமம் படைகளால், சுற்றி வளைக்கப்பட்டு, மக்களனைவரும் பொது இடத்திற்கு அழைக்கப்பட்டு, நடாத்தப்பட்ட தேடுதலில் 20, பேர் முகாமிற்கு கொண்டு செல்லப்பட்டனர். ஏனையோர் பலமணி நேரம் பொது இடத்தில், நிற்க வைத்து பின்னரே வீடுகளிற்கு செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.16.11.92

## வவுனியா படைகளால்நிறைந்தது

வவுனியா நகரிற்குள் வெடி மருந்துகள் கொண்டு வரப்பட்டுள்ளதாக கிளப்பப்பட்ட புரளி ஒன்றினைத் தொடர்ந்து அப்பகுதி, இராணுவ பொலீசாரின் கூட்டு சோதனை நடவடிக்கைகளால் உசாரடைந்தன. சூழவுள்ள முகாம்களில் இருந்தும் கூடுதல் படையினர் அழைக்கப்பட்டு, நகரின் ஒவ்வொரு பகுதியும் சோதனையிடப்பட்டது. அன்று முழுவதும், நகரில் இருந்து வாகனங்கள் வெளியேறவோ, உட்புகவோ அனுமதிகள் மறுக்கப்பட்டு, குண்டு செயலிழக்கச் செய்யும் நிபுணர்கள சகிதம் கடும் சோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. முழுநாள் கடும் சல்லடைத் தேடுதலில் எந்தத் தடயமும் கிடைக்கப்பெறவில்லை.

## காவல்அரண் தகர்ப்பு

முல்லைத்தீவு மாவட்ட வெலிஓயா பகுதியில், அமைந்திருந்த இராணுவ முன்னிட காவல் அரண் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் தாக்கி, 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டதோடு காவல் அரண் தகர்க்கப்பட்டுள்ளது.

17.11.92

## தமிழகத்தில் தொடரும்தேடுதல்கள்

தமிழ்நாடு ஆதம்பாக்க துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து, தமிழக கரையோர மாவட்டங்களில், இலங்கைத் தமிழர் உள்ள பகுதிகள், பொலீசாரின் தீவிர தேடுதல்களுக்கு இலக்காகி வருகின்றன. இச் சம்பவத்திற்குப் பொறுப்பான, தமிழீழ இராணுவத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் என்பவர் வளசரவாக்கத்தில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலீசார் அறிவித்துள்ள போதும், இச் சம்பவத்தை சாட்டாக வைத்து, சந்தேகத்திற்குரிய இலங்கைத் தமிழர்களை கண்காணிப்பினுள் நிறுத்தும் முயற்சிகள் தொடர்வது அவதானிக்கப்படுகின்றது.

இம்முறை தேடுதல்களில், அகதி முகாம்களில் இல்லாத ஏனைய இலங்கைத் தமிழர் வதிவிடங்களே குறியாக்கப்பட்டு வருகின்றன.

## புலிகளை மடக்கநவீனபடையணி

இலங்கைப் போராளிகள், ஆயுத உபயோகத்தில் மட்டுமல்ல, நல்ல பயிற்சி, கடமைப்பாடுடைய ஆளணியை கொண்டிருப்பதாலும், அவர்களது பயமுறுத்தல் தமிழ் நாட்டில் தொடர்ந்திருப்பதாலும், தமிழ்நாடு பொலீஸ் படையை நவீன மயப்படுத்த போதிய வசதிகள் செய்து தரும்படி, இந்திய மத்திய அரசை, முதல்வர் ஜெயலலிதா கேட்டுள்ளார்.

18.11.92

## தளபதிகொலையின் எதிரொலி

திங்களன்று கொழும்பில், கடற்படைத் தளபதி கிளான்சி பெனாண்டோவின் கொலையினைத் தொடர்ந்து கொழும்பில், முப்படைகளும் பாதுகாப்பை உசார்படுத்தி சோதனைகளை தீவிரப்படுத்தினர். இராணுவ பொலீஸ் கூட்டு நடவடிக்கையில், தமிழர்கள் செறிந்து வாழும் பகுதிகளில், வீடுகள், கடைகள், விடுதிகள், பல தேடுதல்களிற்கு இலக்காக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான தமிழ் இளைஞர்கள் விசாரணைகளிற்காக கொண்ட செல்லப்பட்டுள்ளதாக நம்பப்படுகிறது. தகவல்கள் வெளியாக்கப்படவில்லை. இருநாட்களாக கொழும்பில் தமிழர்களின் நடமாட்டங்கள் மிகக் குறைவாகவே காணப்பட்டன.

வவுனியா, மதவாச்சி , அநுராதபுரம், தடை முகாம்களில், குடாநாடு செல்லும், அங்கிருந்து திரும்பும், பயணிகள், பொருட்கள், உட்பட வாகனங்களைனைத்தும் கடும்சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன.

# உரைகல்

ஆசிரியர் அவர்கட்கு,

“தமிழோசை”யில் 13.11.92 அன்று வெளியான திரு.சி.சிவசேகரம் அவர்களின் “மாறுபட்ட சூழலிற் சுய அடையாளத்துக்கான தேடல்” என்ற ஆய்வுரையும் தங்களின் “புகலிட வாழ்க்கையும் சமூகப் பிரக்ஞையும்” என்ற தலையங்கமும் சிந்தனையைத் தூண்டின. இவற்றில் எழுப்பப்பட்ட வாதங்களும், 12.11.92 தேதியின் “Hospital Doctor” என்ற சஞ்சிகையில் பிரசுரமான, Dr Abdul Majidஆல் எழுதப்பெற்ற, “The Mental dilemma of innocents abroad” என்ற கட்டுரை ஒலிக்கும் கருத்துக்களும் ஒத்திருக்கின்றன. குறிப்பாக இளம் தலைமுறையினருக்கு ஏற்படும் சோதனைகள் பற்றிய கவலை இவற்றில் இருந்து எழுகிறது. நீங்கள் கூறியபடி சமூகப் பிரக்ஞையை “நம்மவர்கள்” வளர்க்க காலதாமதம் செய்யக்கூடாது.

‘நம்மவர்கள்’ இதையுணர்ந்து சூழலுக்கேற்றவாறு நம் மரபுகளை அமைக்க ஆவன செய்வது அவசியம். அதேவேளையில் இன்னொரு முக்கிய விஷயத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.என்னதான் நம்மை நாம் மாற்றிக் கொள்ள முயற்சிகள் செய்தாலும், பெரும்பான்மை சமூகத்தின் நல்லுணர்வு இல்லாவிட்டால் இடர்ப்பாடுகள் ஏற்படத்தான் செய்யும். எனவே பெரும்பான்மையினர் தம் சகிப்பற்ற தன்மையை களைந்து, சிறுபான்மை மரபுகளின் “வலிய அம்சங்களை” (திரு சிவசேகரம் குறிப்பிடும் வகையில்) வரவேற்க ஏதுவான சூழ்நிலை உருவாக வேண்டும்.அல்லாவிடின் இளம் தலைமுறையினர் நம் மரபை, வலிய அம்சங்களுட்பட, முற்றாக கைவிடவே தூண்டப்படுவர்; திண்மையாக “நம்” மரபுகளின் வலிய அம்ச அடிப்படையில் சுய அடையாளந்தேட முனைவோர் அல்லல் படுவர். சொந்த மண்ணிலேயே தம் மரபின் வழி நடக்க முடியாமல் அகதிகளாகவும், அதிதிகளாகவும், அண்டுவோராகவும் அயல்நாடு வந்தடைந்தோர் அண்டிய சமூகத்தின் (பெரும்பான்மையினர்) எதிர்ப்பும் புறக்கணிப்பும் இருந்தால் எவ்வித நவீனத்துவத்தாலும் பயனடையார். அப்படி தம் மரபுகளை நவீனத்துவப்படுத்துவதிலும் பார்க்க பெரும்பான்மை சமூக மரபுக்கேற்ப மாறுவது இலகுவாகும் என உணரும் சாத்தியமே அதிகம் - குறிப்பாக வளரும் தலைமுறையினருக்கு. எனவே பழம் மரபுகளின் வலிய அம்சங்களுக்கு நவீனத்துவம் அளித்து மேம்படவைக்க பல முனைகளிலும் மாறுதல்கள் தேவை -தஞ்சம் புகுந்தோர் மத்தியிலும் தஞ்சம் அளித்தோர் மத்தியிலும். இல்லையெனில் இன்னும் 20-30 ஆண்டுகளில் “தமிழோசை” ஆங்கிலத்தில்தான் பிரசுரமாக வேண்டிய நிலை வரும். அதைவிட முக்கியமாக வளரும் சமுதாயத்தினர் மனக்குழப்பத்திற்கும், மனநிலை பாதிப்பிற்கும் ஆளாக நேரிடும். ஏற்கனவே மருத்துவ உலகம் கண்டறிந்த உண்மையொன்றை, அதாவது ஆசிய பெண்மணிகள் வெள்ளை இன பெண்மணிகளிலும் அதிகமாக இந் நாட்டில் தற்கொலை முயற்சிகள் செய்வதை, இங்கு கருத்தில் கொள்ள வேண்டும்.

கா.சங்கர்

Newcastle Upon Tyne

13.11.92

கடந்த 6.11.92 வெளிவந்த ‘தமிழோசை’யில், காயத்திரி கொன்ஸ்டன்ரைன் எழுதிய “தமிழ் அரசியல்வாதிகள் கற்றுக்கொண்டே இருக்கிறார்கள் தமிழர்கள் செத்துக் கொண்டே இருக்கிறார்கள்” கட்டுரையில், இன்று இலங்கை அரசாங்கத்திற்கு அரசியல், இராணுவ ஒத்துழைப்பு வழங்கும் தமிழ் விடுதலைக் குழுவொன்றின் தலைவர் தாம் வழங்கும் ஒத்துழைப்பிற்கு வியாக்கியானம் தர; அதற்கு விளக்கம் தந்துள்ளார், கட்டுரையாளர்.

ஆனால் அத்தலைவர் ஒன்றை மட்டும் சொல்லாமல் சொல்லியிருக்கிறார். அகதியாக வாழ விரும்புவதைவிட துரோகியாக வாழவே விரும்புவதாக.

இங்கு ஒன்றை சுட்டிக்காட்ட வேண்டும். அராலித்துறையில் கொப்பேகடுவ உட்பட உயரதிகாரிகள் கொல்லப்பட்டபோது, அங்கியங்கும் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான EPDP குழுவினர், அங்குள்ள இராணுவத்தால் தாக்கப்பட்டார்கள். தேவானந்தா இது பற்றி மேலிடத்திற்கு முறையிட்டும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இவர்களின் விசுவாசத்திற்கு கிடைத்த பரிசு. இதே கட்டுரையில், “இந்த அரசாங்கத்துடன், நியாயமானமுறையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாண முடியாது”.... சங்கர் ராஜி பேட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளது. கொழும்பில் இயங்கும் EROSற்கு சங்கர் ராஜி போன்றவர்கள் தான் தலைமை தாங்குகிறார்கள். இவர்களுடனிருக்கம் பசீர் M.P அவசர காலச் சட்ட வாக்கெடுப்பின்போது அரசாங்கத்திற்கு ஆதரவாக வாக்களிக்கிறார். ஏன்?

B.நிமால்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழோசை

லண்டன் நவம்பர் 20, 1992

# நரசிம்மராவை வீழ்த்த ஜெயலலிதா திட்டம் - சுப்பிரமணிய சுவாமி

## அமைதிக்கான தீர்வு வேண்டும்

இலங்கையில் நடைபெறும் யுத்தத்தில் மிகவும் பாதிக்கப்படுபவர்கள் அப்பாவி பொதுமக்களே. தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம்பெயர்ந்தவர்கள் தொகை அதிகமாகி கொண்டேபோகிறது. தம்மேல் திணிக்கப்பட்டுள்ள இந்த யுத்தத்தில் இருந்து தப்பியோடி வரும் சகல இன, அப்பாவிமக்களும், பாதுகாப்பின்றி அவதியுறுகின்றனர். தொடர்ச்சியாக பல தரப்புகளாலும் மனித உரிமை மீறல்களும், பலாத்காரங்களும், கொடுமைகளும் நிகழ்கின்றன.

தமது சொந்த ஊரில் வாழ முடியாத நிலையில், நாட்டை விட்டு உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு, உடுத்த துணியுடன் படகுகளில் ஏறி ஓடும் நிர்ப்பந்தத்திற்கு ஆளாகியுள்ளவர் பலர். அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு, நலிவுற்று, பொருளாதாரச் சுமைகளினாலும், மன அமைதி இல்லாமலும், எல்லாம் இழந்து அகதிகளாகவுள்ளோர் பலர்.தொடரும் யுத்தத்தினால் அவர்கள் அனுபவிக்கும் நெருக்கடிகளும் , சாவுகளும், இழப்புகளும் யுத்தத்தை வெறுத்து ஒரு அமைதியான தீர்வே வேண்டும் எனும் உந்தலை உண்டு பண்ணியுள்ளது. இவ்வேளையில் இத்துயர் நீங்க உழைப்பது அனைத்து மக்களதுகடமை.

இலங்கை அரசு முதன்முதலில் திம்புவில், தமிழ்ப் போராளிக் குழுக்களுடான பேச்சுவார்த்தையை நிகழ்த்தியது. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளடங்கிய கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோது,இலங்கை அரசு எந்த அடிப்படையிலும் விட்டுக்கொடாமல் இருந்தமையினால் அப்பேச்சுவார்த்தை தோல்வியடைந்தது. அதைத் தொடர்ந்து பல பேச்சு வார்த்தைகள், இரகசியப் பேச்சுக்கள் என்று நடைபெற்றன. பேச்சுக்கள் நடைபெறுகின்ற போதும், மக்கள் மீதான ஒடுக்குமுறைகள் தொடர்ந்து மேற்கோள்ளப்படுகின்றன. மக்கள் வேட்டையாடப் படுகின்றார்கள்.

இனப்பிரச்னைக்கு அரசியல் தீர்வைக்காண, பாராளுமன்ற தெரிவுக்குழு, ஏழு தமிழ்க்கட்சிகள் கூட்டமைப்பு, மற்றும் ரெலோ, ஈஎன்டிஎல்எவ் ஆகியோரின் பிரேரணைகள் பற்றி தற்போது பரவலாகப் பேசப்படுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டை அறிய ஒரு குழுவை யாழ்ப்பாணம் அனுப்ப பாராளுமன்ற தெரிவுக்கு ஆலோசித்து வருவதாகவும் தெரிய வருகிறது. பல்லின சமயத்தலைவர் குழுவொன்றும் யாழ்ப்பாணம் செல்லவிருப்பதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குவேக்கர் அமைதிக்குழுவும், விடுதலைப்புலிகளுடனும், அரசுடனும் சமாதானத் தீர்வுக்காக பேச்சுக்களை நிகழ்த்தியுள்ளது. இப்படி பல தரப்புகளிலும் பேசப்படும் அமைதிக்கான தீர்வு விரைவில் சாத்தியமாக வேண்டும்.

தற்போது நிகழும் பேச்சுக்கள் மட்டுமல்ல; எந்தப் பேச்சுவார்த்தைகளும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இருந்துதான் ஆரம்பிக்க வேண்டும். பேச்சுவார்ததைகளின் தீர்வு - சகல இன மக்களுக்கும் பாதுகாப்பையும், நல்வாழ்வையும் உத்தரவாதப்படுத்துவதாக அமைய வேண்டும். கடந்த காலத்தில் நடந்த பேச்சுக்கள், பங்கு கொள்ளும் குழுக்களின் தனிப்பட்ட குழு நலன்களை பாதுகாக்கும் முயற்சியாகவோ, காலம் தாழ்த்தும் முயற்சியாகவோ அமைந்ததை பல தடவை கண்டிருக்கிறோம். கடந்த காலங்களில் ஏற்பட்ட இடைக்காலத் தீர்வுகள் நிரந்தரமாகாமல் போனதற்கு, சகல தரப்பினரும் கொடுத்த வாக்குறுதிகளை கைவிட்டதும், ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்வுகளை நடைமுறையில் கொண்டு வராமல் தவிர்த்தமையும் காரணங்களாகும். இந்த வகையில் சகல சிங்கள அரசுகளும் ஒரே தவறை இழைத்துள்ளனர். சமாதானத் தீர்வுக்கான இணக்கம் ஏற்படும் பட்சத்தில் அதை நடைமுறைப்படுத்த சகலரும் புரிந்துணர்வுடன் செயல்பட வேண்டும்.

யுத்தம் முடிவடைந்து அரசியல் தீர்வு மூலம் சமாதானம் ஏற்பட சகல தலைவர்களும் சமாதான விரும்பிகளும், உழைக்க வேண்டியது, தற்போதைய நிலையில் மிக மிக அத்தியாவசியத் தேவையாகும்.

(சென்னை நவ 14)

பிரதமர் நரசிம்மராவ் ஆட்சியை வீழ்த்த தமிழக முதல்வர் ஜெயலலிதா திட்டம் தீட்டுவதாக, ஜனதாக் கட்சியின் தலைவர் சுப்பிரமணிய சுவாமி கடந்த சனிக்கிழமை காலை பத்திரிகையாளர்க்கு கூறியுள்ளார்.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், பாரதீய ஜனதாக் கட்சித் தலைவருமான எல்.கே.அத்வானியை டில்லியில் தமிழக முதல்வர், சந்தித்து உரையாடியிருக்கிறார்; அவரோடு இராப்போசன விருந்திலும் கலந்து கொண்டிருக்கிறார்.

அயோத்தியில், பாரதீய ஜனதாக் கட்சியினால் உருவாக்கப்படும் தலையிடிகளைச் சமாளிக்க, பிரதமர் முயன்று கொண்டிருக்கும் வேளையில், இ.காங்கிரசுடன் கூட்டரசு அமைத்துள்ள, ஒருவர், அயோத்தி பிரச்னையை உருவாக்கும் கட்சியின் தலைவரை சந்திப்பதும் அவருடன் உரையாடுவதும் ஒரு சதியென்றும், பிரதமருக்கு எதிரான செயலென்றும் சுவாமி கூறியுள்ளார்.

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின், மேற்படி நடவடிக்கைகள் குறித்து, பிரதமர் விளக்கம் கேட்க வேண்டும் என்றும் சுவாமி வேண்டுகோள் விடுத்துள்ளார். இதேவேளை, அ.இ.அ.தி.மு.க.வுக்கும் இ.காங்கிரசுக்கும் இடையே நிலவும் உறவு தொடரும் என மத்திய உள்துறை அமைச்சர் சவான் கூறியிருக்கிறார். இதுபற்றி சுவாமியிடம் கேட்ட பொழுது, 'இந்தக் கேள்வியை திரு.சவானிடம் தான் கேட்க வேண்டும்' என பதிலளித்தார்.

### சந்திரலேகா நியமனம்

ஐ.ஏ.எஸ். அதிகாரியாகவிருந்து இராஜினாமா செய்த சந்திரலேகா தமிழக ஜனதா கட்சியின் தலைவராக நியமனம் செய்யப்பட்டுள்ளார் என்பதனை, சந்திரலேகா முன்னிலையில், பத்திரிகையாளர்களிடம் அன்றையதினம் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்தார். பணியிலிருந்து விலகிவிட்டு, அரசியலில் பிரவேசிக்கும் முதலாவது ஐ.ஏ.எஸ் அதிகாரி சந்திரலேகாதான் என்பது குறிப்பிடத்தக்கது.

சந்திரலேகா மீது திராவகம் வீசப்பட்ட சம்பவம் தொடர்பாக, முன்னாள் ஆந்திர முதல்வர் ஜனார்த்தனரெட்டியுடன் தமிழக முதல்வர் ஜெயலலிதா பேசியுள்ளதாக சுவாமியின் கூற்றுக்கு ரெட்டி மறுப்புத் தெரிவித்தமை பற்றி நிருபர்கள் கேட்டபோது, "ஒன்றரை மாத காலத்திற்கு பின்னரே இந்த மறுப்பு வந்துள்ளது என்றும் இக் காலதாமதம் ஏன் என்றும் விளக்கப் படவேண்டும் என்றும் திரு.சுவாமி பதிலளித்தார்.

இது குறித்து மேலும் கருத்துத் தெரிவிக்கையில், தமிழீழ விடுதலைப்புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக தமிழக முதல்வரின் தொலைபேசி பேச்சுக்கள் பதிவு செய்யப்படுகின்றன. ஆகவே, சந்திரலேகா தாக்கப்பட்டது தொடர்பான ஜெயலலிதாவின் சம்பாஷணையும் சி.பி.ஐ விசாரணையில் வெளியாகும் என்றும் கூறினார்.





### ஜெயலலிதா ஆலோசனை

பாரதீய ஜனதா கட்சித்தலைவர் அத்வானியைச் சந்தித்து உரையாடிய, தமிழக முதல்வர் மேலும் முன்னாள் பிரதமர் சந்திரசேகரையும், பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களையும் தலைநகரில் சந்தித்து பேசியுள்ளார். மத்திய உள்துறை அமைச்சர் திரு.சவானையும் சந்தித்து நீண்ட நேரம் பேசியுள்ளார். சனியன்று மாலை சென்னை திரும்புவதற்கு முன்பாக மூத்த மத்திய அமைச்சர்களான, சரத் பவார், அர்ஜீன் சிங் ஆகியோரையும் தனித்தனியாக தமிழக முதல்வர் சந்தித்துப் பேசினார். இ.காங்கிரஸ், அ.இ.அ.தி.மு.க உறவு ஊனமடைந்துள்ள, இவ்வேளையில், பல்வேறு அரசினல் தலைவர்களை ஜெயலலிதா சந்தித்து உரையாடுவது அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகக் கருதப்படுகிறது. பிரதமர் நரசிம்மராவைச் சந்திக்க, ஜெயலலிதா கோரவில்லை, ஆனால் கோரியதாக கதை கட்டி விடப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. தலைநகரத்தில் 24 மணிநேரம் தங்கிய ஜெயலலிதா, 90 நிமிட நேரம் மட்டுமே அலுவலகப்பணிகளில் ஈடுபட்டிருக்கிறார். மற்றைய நேரம் முழுவதையும் அரசியல் தலைவர்களை சந்தித்து உரையாடுவதிலேயே செலவிட்டார்.

## "குவேக்கர்" சமாதான தூது!
### படைகள் வாபஸ் பெற்றாலே பேச்சு

(நமது நிருபர்)

லண்டன் தலைமையகமாக கொண்டு செயற்படும், குவேக்கர் சமாதானக்குழு, இலங்கை இனப் பிரச்சனை சமாதான தீர்வில், கடந்த இரு வருடங்களாக மேற்கொண்ட முயற்சியின் மற்றொரு கட்டத்தை கடந்த வாரம் முடித்து லண்டன் திரும்பியுள்ளது.

இம்மாத முற்பகுதியில் லண்டனில் இருந்து அதன் செயலாளர் ராமமூர்த்தி, கொழும்பு பிரதிநிதி பிலிப் டெஸ்மன்ட் தூதுக்குழு, யாழ்ப்பாணம் சென்று, விடுதலைப் புலிகள் பிரதிநிதிகள் அன்ரன் பாலசிங்கம், யோகி, பேபி, ஆகியோருடன் பேச்சுக்களை மேற்கொண்டது. வழமை போல விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுடன் பேச கேட்கப்பட்ட அனுமதி இம்முறையும் மறுக்கப்பட்டுள்ளது.

ஒரு வாரகால பேச்சுக்களை முடித்துக் கொண்டு, சனிக்கிழமை கொழும்பு திரும்பிய- தூதுக்குழு- யாழ்பபாணம் செல்ல முன்னர் பேச்சு நடாத்திய, இலங்கை அமைச்சர்கள், ஏ.சி.எஸ்.ஹமீட், தொண்டமான், ஜனாதிபதி ஆலோசகர் பிரட்மன் வீரக்கோன் ஆகியோருடன் விடுதலைப்புலிகள் தெரிவித்த யோசனைகளைமுன்வைத்துபேசியுள்ளனர்.

பொதுமக்கள் அனுபவிக்கும் துயங்களை கருத்திற் கொண்டு, உடன் போர் நிறுத்தமும், சமாதான பேச்சு முயற்சிகளையும் ஊக்குவிக்க ஆர்வம் காட்டி செயல்படும் இக் குவேக்கர் சமாதானக் குழு, விடுதலைப் புலிகள் முன் வைத்த முன்மொழிவுகளை, மேற்படி அரச பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தனர்.

வடக்கில் இருந்து படைகள் வாபஸ் பெற்று உடனடி யுத்த நிறுத்தம் ஏற்பட்டாலே அரசுடன் பேச்சுக்கள் சாத்தியம், என விடுதலைப் புலிகள் கண்டிப்பாக தெரிவித்த நிபந்தனைகள், அரசு தரப்பில் பேச்சுக்களை தொடர வாய்ப்பில்லாமல் ஆக்கியுள்ளது.

இவை பற்றி பாராளுமன்றத்தில் பதிலளித்த பிரதமர் டி.பி.விஜயதுங்க; மேற்குறிப்பிட்ட தகவல்கள எதனையும் விடுதலைப்புலிகள், அரசிடம் முன்வைக்கவில்லையென்றும், குவேக்கர் குழு தனிப்பட்ட முறையிலேயே, யாழ்பபாணம் சென்று விடுதலைப்புலிகளிடம் பேசியது என்றும் கூறியுள்ளார்.

இது குறித்து பகிரங்கமாக கருத்து தெரிவிக்க மறுத்த ராமமூர்த்தி, பேச்சை தொடர அடுத்த சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து, லண்டன் திரும்பியுள்ளார்.

## கருணாநிதி மனு நிராகரிப்பு

இரண்டு மாதங்களின் முன்பு, முதல்வர் ஜெயலலிதா மீது கருணாநிதி குற்றம் சாட்டி ஆளுநரிடம் மனு சமர்ப்பித்தமை அறிந்ததே. இந்த மனுவுக்கு கடந்த சனிக்கிழமை பதிலளிக்கும்போது,"முதலமைச்சர் ஜெயலலிதா மீது வழக்குத் தொடர அனுமதி கொடுக்க அவசியமில்லை" என்று தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயண சிங் தெரிவித்துள்ளார். அவர் மேலும் புகார் மனுவில் முதல்வர் மீது கூறப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளுக்கு அடிப்படைக் காரணம் இல்லை. ஆகவே வழக்குத் தொடர அனுமதி தரப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

"தமிழக ஆளுநர் இவ்வாறு பாரபட்சமாக நடந்துள்ளது வருந்தத்தக்கது, கண்டிக்கப்பட வேண்டியது" என்ற திமுக தலைவர் கருணாநிதி கூறியுள்ளார். "ஆளுநர் மறுப்புத் தெரிவித்ததை அடுத்து, நீதிமன்றத்தில் வழக்குத் தொடர வழிவகுத்துத் தந்துள்ளார். மேலும் ஆளுநர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகளில் கறுப்புக்கொடி காட்டப்படும்" என்றும் இது தொடர்பாக திமுக தலைமை நிர்வாகக் குழுவில் முடிவெடுக்கப்படும் என்றும் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.


"ஜெயலலிதா பாரத ஜனதாக் கட்சியுடன் உறவுகொள்ள நடத்திக் கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகளைப் பார்த்து பயந்து, இப்படியொரு கடிதம் தான் சென்னையில் இல்லாதபோது அனுப்பப்பட்டுள்ளது" என்றும் கருணாநிதி கூறியுள்ளார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## பிறந்தநாள் வாழ்த்து



### மயூரி கணேசமூர்த்தி

கணேசமூர்த்தி வசந்தி தம்பதிகளின்
செல்வப் புதல்வி மயூரி தனது மூன்றாவது பிறந்தநாளை
20.11.92 வெள்ளிக்கிழமை அன்று, கொண்டாடுகின்றார்.

"மான் விழிதானுயர்த்தி மந்திரப் புன்னகை
பூக்கும் சுந்தரச் செல்வி மயூரி"

தரணியில் நீடுயர்ந்து வாழ வாழ்த்தும் அப்பா, அம்மா
அம்மம்மா, கிஷானி, மற்றும் உற்றார், உறவினர்கள்.

# மூன்று கவிதைகள்

மிரொஸ்லாவ் ஹொலுப் (Miroslav Holub) செக் (Czech) கவிஞர்

(தமிழில் : மணி)

## கதவு

போ, கதவைத் திற
ஒருவேளை வெளியில் அங்கே
ஒரு மரமோ வனமோ
தோட்டமோ
ஒரு மாய நகரமோ இருக்கலாம்

போ, கதவைத்திற
ஒரு வேளை நாயொன்று கிளறிக்
கொண்டிருக்கலாம்
ஒரு வேளை நீ முகத்தையே
விழியையோ
ஒரு படத்தின்
படத்தையோ காணலாம்

போ, கதவைத் திற
மூடுபனி இருந்தால்
அது விலகி விடும்

போ, கதவைத்திற
அங்கே இருள் மட்டுமே
ஒலித்துக் கொண்டிருந்தாலும்
வெறிதான காற்று
மட்டுமே இருந்தாலும்
அங்கு
எதுவுமே
இல்லாது போனாலும்
போ, கதவைத்திற

குறைந்தது
காற்றேனும்
வரக்கூடும்

## ஆசிரியர்

'பூமி சுழல்கிறது' என்கிறார் மாணவர்
'அப்படியில்லை, பூமி சுழல்கிறது'
என்கிறார் ஆசிரியர்

'மலைகள் பசுமையாகின்றன' என்கிறார் மாணவர்
'அப்படியில்லை, மலைகள் பசுமையாகின்றன'
என்கிறார் ஆசிரியர்

'ஈரிரண்டு நான்கு' என்கிறார் மாணவர்
'அப்படியில்லை, ஈரிரண்டு நான்கு' என்று
திருத்துகிறார் ஆசிரியர்

ஏனென்றால், ஆசிரியருக்கே அதிகம் தெரியும்.

## கோமாளிகள்

கோமாளிகள் எங்கே போவார்கள்?

கோமாளிகள் எங்கே தூங்குவார்கள்?

கோமாளிகள் என்ன உண்பார்கள்?

ஒருவர் தவறாமல்
ஒருவருமே
இனிமேற் சிரியார்களாயின்
கோமாளிகள் என்ன செய்வார்கள்,

அம்மா?

IN CUSTOMER SERVICE SINCE 1982

6 Kumars

WHERE GOOD THINGS COST LESS

MINI SUPERMARKET

நத்தார், புதுவருட, பொங்கல்

பண்டிகைகளை முன்னிட்டு

25-11-1992 முதல் 25-01-1993 வரை

OPEN 7 DAYS A WEEK 8 AM - 9 PM

மலிவு விற்பனை

இலங்கைத் தயாரிப்புகள்

பதனிடப்பட்ட மீன்வகைகள், மரக்கறிவகைகள், அரிசிமா, மிளகாய்த்துள், இந்திய பருப்பு வகைகள்
மா, ரில்டா, பாரி அரிசி வகைகள், சகலவிதமான சரக்குப்பொருட்கள், எவர்சில்வர் பாத்திரங்கள்

தமிழ் திரைப்படப் பாடல்கள் (புதியவை + பழையவை)
AUDIO, CD ஆகியன மொத்த விற்பனை விலையில்

தரமான பொருட்களை நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே விஜயம் செய்யுங்கள்

6 KUMARS MINI SUPERMARKET
285 High Street North, Manor Park, London E12 6SL
Tel:- 081 471 5742



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ‘லண்டனில் தமிழ் அவைக்காற்று கலைகள்’ - நடனம்

கடந்த 24.10.92இல் தமிழோசையும், தமிழ் அவைக்காற்று கலைக்கழகமும் இணைந்து ‘தமிழரங்கம்’ என்ற தலைப்பில் நடத்திய ‘லண்டனில் அவைக்காற்று கலைகள்’- கருத்துப்பரிமாறல் நிகழ்ச்சியில், நடனம் குறித்து நடன ஆசிரியை திருமதி சுபத்ரா சிவதாசன் அவர்கள் ஆற்றிய உரையின் பகுதிகள் சில இங்கு பிரசுரமாகின்றன.

இலங்கையில் 1968 இலிருந்து நடனக்கலையில் ஈடுபட்டு, உழைத்து வரும் திருமதி சுபத்ரா சிவதாசன் சுமார் இருபது மாணவிகளுக்கு ‘அரங்கேற்றம்’ நிகழ்த்தியவர். இவரது லண்டன் வருகையைத் தொடர்ந்து, விம்பிள்டன் கணபதி ஆலயத்தில், 1984 மே மாதம், நடன வகுப்புகளை ஆரம்பித்த இவர், தற்போது தான் சுயமாக ஸ்தாபித்த, ‘நூபுர கேந்திர’ நடனப்பள்ளியில் சுமார் எண்பது மாணவிகளுக்கு நடனப்பயிற்சி அளித்து வருகிறார். அண்மையில், லண்டனில் மூன்று நாட்டிய நாடகங்களை தயாரித்து மேடையேற்றியுள்ளார். இவர் திருமதி பாலசுந்தரி பிரார்த்தலிங்கம், திரு அடையார் லஷ்மணன் ஆகியோரிடம் நடனம் பயின்றவர்.



‘கலாக்ஷேத்ரா’ என்ற கலைக் கோயிலை நிர்வகித்த மஹா மேதை ஸ்ரீமதி ருக்மிணி அருண்டேலது கருத்துப்படி, “beauty is style”, அதாவது எங்கே அழகான அசைவுகள் உள்ளதோ; எங்கே நாட்டியத்தை ஒரு மொழியாக நாம் பயன்படுத்தி, ரசிகருக்கு எம்மை தெளிவாக வெளிப்படுத்தக் கூடிய முறைகள் இருக்கிறதோ; அது எந்தப் பாணியாக இருந்தாலும், அதை அனுசரிப்பது மிக முக்கியம். நாட்டியத்தை ஒரு சிறு வட்டத்துக்குள் அடக்கி அப்படித் தான் செய்ய வேண்டும், அந்த வரையறையைத் தாண்டக்கூடாது என்று கட்டுப்படுத்த முடியாது.

தற்போது இக்கலை பாரதத்தில் மட்டுமின்றி உலகத்திற் பல பாகங்களிலும் பரப்பப்பட்டு பலராலும் மதிக்கப்பட்டு வருகிறது. ஆங்கிலேயர் மட்டுமன்றி பிரான்ஸ், ஜேர்மனி, அமெரிக்கா மற்றும் பல வெளிநாடுகளில் இருந்தும் பலர் இக்கலையை விரும்பி மதித்து அதை கற்கும்போது, வெளிநாட்டில் குடியேறியிருக்கும் நாம் எமது பிள்ளைகளுக்கு இந்த பாரம்பரிய கலையை சொல்லிக் கொடுக்க முன் வருவது அதிசயமில்லை. ஆனால் அதை லண்டனில் பிறந்து வளர்ந்து வரும் பிள்ளைகள் எவ்விதம் கற்கிறார்கள் என்பது தான் முக்கியம். இது அவ்வளவு எளிதான விஷயமல்ல. ஏனெனில் நாட்டியம் சமய அடிப்படையிலே உருவாக்கப்பட்டது. முதலில் பிள்ளைகளுக்கு சமய அறிவை ஓரளவு போதிக்க வேண்டும். இந்தக் கலை எமது கலாச்சாரத்துடன் பின்னிப் பிணைந்திருக்கும் ஒன்றாகையால், அதை அவர்களுக்கு நன்கு விளக்கி ஏற்றுக் கொள்ளப் பண்ண வேண்டும். இங்குள்ள பிள்ளைகளுக்கு தாய்ப் பாஷை தெரியாதது இன்னொரு தடை. ஆயினும் நாட்டியம் தமிழில் மட்டுமன்றி வேறு பல பாஷைகளையும் அதாவது சமஸ்கிருதம், தெலுங்கு முதலியவற்றை தழுவி அமைந்திருப்பதால், ஆங்கிலத்தை ஒரு பொது மொழியாக வைத்து ஒவ்வொரு விஷயத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து மாணவருக்கு விளக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவிலோ இலங்கையிலோ அல்லது இம்மாதிரியான தடைகள் இல்லாத வேறு நாட்டு மாணவர்கள் நாட்டியத்தை பயிலும் போது இலகுவாக அதை புரிந்து பயிலுகிறார்கள். ஆனால் லண்டனிலோ மேற்கத்திய நாடுகளிலோ நடனம் போன்ற கலைகளை பயிலும் மாணவர்களுக்கு இது பெரும் பிரச்னையாகக் காணப்படுகிறது. இப்படியான அடிப்படை விஷயங்களை மாணவருக்கு சொல்லிக் கொடுப்பது எவ்வளவு முக்கியமோ அதே நேரத்தில் ஆரம்பத்திலேயே இவற்றை அவர்களுக்கு வற்புறுத்தி திணிப்பதுவும் சரியல்ல.

## வித்தைக்கு விலையில்லை

முதன் முதலில் மாணவர்கள் கலையை படிக்க ஒரு குருவிடம் வரும்போது சில சில சம்பிரதாயங்களை கடைபிடிப்பது மிக முக்கியம். அதாவது மாணவர் குருவிற்கு குருதட்சணையை கொடுத்த குருவை வணங்கி பின் வித்தையை பயில ஆரம்பிக்கிறார்கள். இது பலகாலமாக கடைப்பிடிக்கப்படும் சம்பிரதாயம். இது முக்கியமாக இங்குள்ள பிள்ளைகளுக்கோ, பெரியவர்களுக்கோ ஏன் என்று விளங்குவதில்லை. குருவை அவரது உருவத்தைப் பார்த்து மதித்து வணங்குவதைவிட அதாவது ‘அவர் இன்னார்’ என்று நினைத்து மதிப்பதைவிட, குருவின் உள்ளிருந்த தாம் பெறப்போகும் வித்தைக்குத்தான் அவர்கள் அவ்வளவு மரியாதையும் கொடுக்கிறார்கள் என்று விளங்க வேண்டும். அப்பொழுது அதை பயிலும் மாணவர்களின் கருத்தில் தாம் பயிலும் வித்தையின் மதிப்பு மிகவும் உயருகிறது. தங்களை அறியாமலேயே அதை அவர்கள் ஒரு பயபத்தியுடன் பயில ஆரம்பிக்கிறார்கள். ஆசிரியைக்கு நாம் பணத்தை கொடுக்கிறோம். அதற்கு பதில் அவர் வித்தையை சொல்லிக் கொடுக்கிறார். இதனால் அவரை எந்த விதத்திலும் நாம் மதிக்க தேவையில்லை என்ற வியாபார ரீதியான எண்ணம் இங்குள்ள பலருக்கு இருப்பதை உணருகிறேன். வித்தைக்கு விலையில்லை என்பதை அவர்கள் உணர வேண்டும்.



கங்கா சம்ரக்ஷணம்

நாட்டியம் எல்லோருக்கும் இயற்கையாகவே மிகவும் கஷ்டப்பட்டு தான் சொல்லி கொடுக்க வேண்டும். ஏனெனில் நாட்டியம் முழு அங்கத்தையும் உபயோகித்து செய்யும் ஒரு கலை. சில மாணவர்கள் பெற்றோரின் வற்புறுத்தலுக்காக பயிலுகிறார்கள். சிலர் தாங்களே விரும்பி பயில தொடங்கினாலும், பின்பு நாட்டியத்தை தொடர்ந்து படிக்க தொடங்கியவுடன் அதன் கடினமான பயிற்சியினால் மனச் சோர்வடைந்து விடுகிறார்கள். அத்துடன் லண்டன் பிள்ளைகள் பற்பல விதமான படிப்புகளிலோ விளையாட்டுத் துறைகளிலோ ஈடுபடுவதால் சில வேளை அவர்கள் நாட்டியத்தில் தங்கள் முழுக்கவனத்தையும் செலுத்த முடியாது இருக்கிறார்கள். ஒவ்வொரு வருடமும் போக பள்ளிக்கூட படிப்புகளோ அவர்களது முழுக் கவனத்தை ஈர்க்கக்கூடிய அளவு உயர்ந்த தரத்தில் உள்ளது. இவற்றிற்கிடையில் மாணவர் நாட்டியம் போன்ற கலையை வகுப்பிலும் அக்கறையுடன் படித்து வீட்டிலும் அதனை சாதகம் செய்து இக்கலையை முழுமையாக படிக்கத் தெண்டிப்பது பாராட்டத் தகுந்தது. இந்நாட்டில் தற்போது பள்ளிக்கூடங்களிலும், எமது கலாச்சாரத்தையும், கலைகளையும் மதித்து மாணவர்களை பெரிதும் ஆதரிக்கிறார்கள்.

> “அரங்கேற்றத்தின் பின், தான் படித்த கலையை ஒரு மாணவி கைவிடுவதானால், அரங்கேற்றம் இவ்வளவு செலவழித்து செய்வதில் பிரயோசனமில்லை.”
>
> -நடன ஆசிரியை திருமதி சுபத்ரா சிவதாசன்

## லண்டன் மாணவர்கள்

லண்டனில் அநேகமான பிள்ளைகள் மிகவும் திடமான கருத்துக்களையும், யாருக்கும் வளைந்து கொடுக்காத குணங்களையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். காரணம், அவர்கள் வளரும் சூழ்நிலை அப்படிப்பட்டது.அந்த மாதிரியான குண இயல்புகளைக் கொண்ட மாணவரை, ஆசிரியை தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவது மிகக் கடினம். ஒவ்வொரு மாணவரையும் தனித்தனியாக நன்கு புரிந்து கொண்டு, தான் சாதிக்க வேண்டியதை வெவ்வேறு விதங்களில் விளக்கி, அவர்களை முதலில் தம் வழிக்குக் கொண்ட வந்து, பின் அவர்களுக்கு கட்டுப்பாட்டை கொண்டு வரவேண்டும். எடுத்த எடுப்பிலேயே மிகக் கடினமான பயிற்சியை மாணவருக்குக் கொடுப்பது அவ்வளவு விவேகமில்லை.



பாஞ்சாலி சபதம்

நாட்டியத்தில் மிகவும் அடிப்படையான நிலை அரைமண்டி அல்லது மண்டல ஸ்தானம். அதாவது முழங்கால்களை மடித்து பாதங்களை பக்கத்தில் திருப்பி ஏறக்குறைய தனது உயரத்தின் அரைவாசிக்கு பதிந்து இருக்கும் நிலை. இந்நிலையில் இருந்து பல அடவுகளை தொடர்ந்து செய்யும்போது, மாணவர் கால் வலியினால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அதேபோல் கை அசைவுகள் உடல் அசைவுகள் இவற்றிலும் பற்பல கடினமான நிலைகள் உண்டு. லண்டனில்அடிக்கடி Discoவும் வேறுவித மேற்கத்திய நடனங்களும் ஆடும் பிள்ளைகளுக்கு இந்த பயிற்சி கஷ்டமானதாக இருந்தாலும், அவர்கள் நாட்டியத்தை சரியான முறையில் செய்யும் ஆர்வத்தை தூண்ட வேண்டும். அதற்கு வெவ்வேறு வழிகளை ஆசிரியர்கள் கடைப்பிடிக்க வேண்டும்.



மீனாட்சி கல்யாணம்

## அரங்கேற்றங்கள்

சமய சம்பந்தமான பாடல்களுக்கு அபிநயங்களைச் சொல்லிக் கொடுக்கும்போது, அந்தப் பாடல் அமைந்துள்ளது, என்றும்,அந்தந்த தெய்வங்களைப் பற்றிய வரலாறுகளையும் கதைகளையும் மாணவருக்கு விளக்கமாக கூறி பின், நாட்டியத்தை சொல்லிக் கொடுக்கையில் அதை அவர்கள் புரிந்து கொண்டு இலகுவாக அபிநயங்களை செய்ய முயலுகிறார்கள். ஒவ்வொரு வசனத்தையும் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும்போது அது தமிழில் சொல்வதிலிருந்து வார்த்தைகள் மாறி வருகின்றன. இந்த மாதிரியான பிரச்னைகளுக்குள் மாணவரை பயிற்றுவித்து, அரங்கேற்ற நிலைக்கு நாம் கொண்டு வருவதற்கு ஏறக்குறைய 7அல்லது 8 வருடங்களாவது ஆகும். வகுப்பில் தனிப்பிள்ளையாக ஒரு மாணவி கற்றால் அவரது திறமைக்கு ஒப்ப குறைந்த காலத்தில் அரங்கேற்றம் செய்யலாம்.ஆனால் லண்டனில் அரங்கேற்றம் செய்வது இப்போது மிகவும் செலவான ஒரு விஷயமாக கருதப்படுகிறது. ஏனெனில் தேவையானவற்றை விட தமது கௌரவத்தை நிலைநாட்ட சில சில அநாவசிய செலவுகளையும் பலர் செய்கிறார்கள். மாணவியின் ஆடைகள் மற்றும் மண்டபம்,ஒலி, ஒளி அமைப்புகள், பக்க வாத்தியம்

இப்படியான அவசியமான செலவுகள் நிச்சயம் கவனிக்கப்பட வேண்டும்.லண்டனில் அரங்கேற்றம் செய்யும் ஒரு மாணவி குறைந்தது 6 மாதங்களுக்கோ அல்லது அதைவிட கூடிய காலத்திற்கோ தினசரி கடினமான பயிற்சி பெறுகிறார். அத்துடன் சபையோர் முன் 2 அல்லது 3 மணிநேரம் ஆடி தமது திறமையனைத்தையும் அவர் வெளிப்படுத்தி ரசிகரது பாராட்டைப் பெறுகிறார். இதனால் அவரது தன்னம்பிக்கை கூடுகிறது. இதன்பின் அவர்கள் நாட்டியத்தில் மட்டுமல்ல மற்ற துறைகளிலும் முதன்மையான ஒரு ஸ்தானம் வகிக்க முயலுகிறார்கள். அரங்கேற்றத்தின் பின், தான் படித்த கலையை ஒரு மாணவி கைவிடுவதானால், அரங்கேற்றம் இவ்வளவு செலவழித்து செய்வதில் பிரயோசனமில்லை. அதே நேரத்தில் எத்தனையோ மாணவர்கள் அரங்கேற்றம் செய்ய வசதிகள் இல்லாததால் அரங்கேற்றம் செய்வதில்லை. அப்படியான சந்தர்ப்பங்களில் தாங்கள் படித்ததை தொடர்ந்து படித்து பின் அதில் நன்கு அனுபவம் அடைந்தபின் தாங்களாகவே புதிய படைப்புகளை உருவாக்கலாம். தங்களது கலை அறிவை வளர்ப்பதற்கு அரங்கேற்றம் அவசியமில்லை.

சில சில அபிநயங்கள் இலங்கையிலோ இந்தியாவிலோ நாம் சொல்லிக்கொடுக்கும் போது, மாண

(11ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு வீதிக்கு வந்த மனிதன்

- சாள்ஸ் -

சிறுகதை

பஸ் தரிப்பிடத்தை வந்தடைந்து விட்டது. மனிதர்கள் மிக அவசரமாக முண்டியடித்துக் கொண்டு இறங்கிக் கொண்டிருந்தனர் நானும் அவர்களுடன்...

வெளியே பனி துகள்களாக்கிக் கொட்டிக்கொண்டிருக்கிறது. அந்த மஞ்சள் விளக்குகள் படர்ந்து கிடக்கும் பனித்துகள்களின் மீது பரவி மினுங்கிக் கொண்டிருக்கிறது. குளிர் மைனஸ் நாலைத் தாண்டிவிட்டது. எனது 'மப்பிளரை' கழுத்துக்கும் காதுகளுக்கும் இறுகச் சுற்றிக் கொண்டு நடக்கிறேன். குளிர் காலத்து இரவென்பதால் எல்லோரும் மிகவேகமாகவும் சோடிகள் ஒருவரையொருவர் அணைத்துக் கொண்டும் நடக்கிறார்கள்.

இந்தச் சந்தடிக்குள் 'அம்புலன்ஸ்' வாகனமொன்றும் இரண்டு 'போலிஸ் கார்'களும் 'ஊதி'க் கொண்டு கடந்து போகின்றன. ஏதோ நடந்துவிட்டது. நாளாந்தம் விபத்தினால் செத்துப்போகின்ற மனிதர்கள் ஏராளம். அதிலும் நெருக்கமான நகரங்களில் வாகன ஓட்டமும், இந்தப் பனிபடிந்த வீதிகளின் சறுக்கல்களும் சாரதிகளை யமனாக்கி விடுகின்றதுதான்.

நான் இனிவரும் றெயினைப் பிடித்தாக வேண்டும்; இல்லையென்றால் இன்னும் அரைமணி நேரம் குளிருக்குள் அம்போதான். குளிர் எலும்புக்குள்ளும் ஓட்டை துளைத்துவிடும். ஸ்ரேசனுக்குள் ஏறும் 'மூவிங்'படிகளினூடே மேலே ஏறி நடந்தேன். படிகளைக் கடந்து போய்த் திரும்பும் ஒரு முடக்கில் துணியொன்றை விரித்து வைத்து பாடகன் ஒருவன் இனிமையாகப் 'கிற்றாரில்' பாடிக்கொண்டிருந்தான். இந்த புகையிரத நிலையத்தோடு இணைந்து பரந்து கிடக்கின்ற பல கடைகளின் தொடர் இந்நகரத்தில் விசேடமானது. சமர் காலமோ வின்ரர்காலமோ நிரம்பி வழியும் சனக்கூட்டமும், மூலைக்கு மூலை பாடிக்கொண்டிருக்கும் கலைப் பிச்சைக்காரர்களையும் பார்த்துக் கொண்டே நேரம் போக்கலாம்.

எதிரே இருந்த இருக்கைகள் எங்கும் சோடிகள் பல தம்மை மறந்து உதடுகளால் பேசிக்கொண்டிருந்தார்கள்.

'வாக்கிடோக்கி பொலிஸ்' காரர்களும், ஸ்ரெச்சர் தாங்கிய இரண்டு 'அம்புலன்ஸ்' காரர்களும் எனக்கு முன்னால் ஓடிக்கொண்டிருந்தார்கள். இங்கு எனக்கருகாமையில் இந்த ஸ்ரேசனுக்குள் ஏதோ நடந்துவிட்டது நானும் அவசரப்பட்டேன்.... என்னதான் நடந்து விட்டது?

அங்கே சுவர் ஓரமாக இருந்த பச்சை 'ரெலிபோன் பூத்'துக்குப் அருகில் சனம் கூடிநின்று வேடிக்கை. பார்த்தது. நானும் கிட்டப் போய் எட்டிப்பார்த்தேன். ஒரு மனிதன் எந்த அசைவுகளுமற்றுக் கிடக்கிறான். என்ன இவன் செத்துப்போனானா அல்லது இன்னும் உயிர் உள்ளதா? என்ற எண்ணம் மின்னுவதற்கிடையே அவன் முகத்தைப் பார்த்தேன். ஆ.... இவனா? எனக்குத் தெரிந்தவன் என்னோடு ஒரு தடவை நன்றாகத் கதைத்தவன் அதுவும்..... எனது மொழியில்.... அவசரமாக பரிசோதித்து ஸ்ரெச்சரில் போட்டுக் கட்டித் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். வேடிக்கைபார்த்த சனங்களும் தோள்களைத்தூக்கி உதடுகளைப் பிதுக்கி பேசிக்கொண்டது என் காதுகளில் விழுந்தது.

"இவன் தூள் பத்திறவங்கள்ள ஒருவன்"

"தூள் விக்கிறவன்"

"இவடத்திலதான் இவன் படுத்தெழும்பிறவன்"

"இந்த டஸ்பின்னுகளுக்குள்ள இருந்து மிச்சம் மீதிகளையெல்லாம் எடுத்துச்சாப்பிடுகிறதைக் கண்டிருக்கிறன்"

"இவன் ஒரு ஆசியாக்காரனாயிருக்கோனும் அல்லது சூரினாம் காரன்"

இவனொரு இலங்கையன் - ஒரு தமிழன் என்பது என்னால் மட்டும் தான் அடையாளம் காண முடிந்தது.

நானும் புகையிரத மேடைக்கான படிகளில் இறங்கி றெயின் பிடித்து விட்டேன். தொடர்ந்தும் அவன் நினைவுகள்....

அன்று அவனுடன் ஏனோதானோ என்று கதைத்துக் கொண்ட கதைகள்.

எனக்கென்ன என்று ஒதுங்கியிருந்து வேடிக்கை பார்க்கும் ஒருவகை சுயநலப்புத்தி...ம்... நான் என்ன செய்யலாம்... தமிழாக்களிட்ட காசு சேர்த்து இலங்கைக்கு அனுப்புவமா? அனுப்புவது.... யாருக்கு,?

ஒருவன் இறந்து தொலைந்த பின்னர் சோகமும் இரக்கமும் கொள்ளுகின்ற இந்தப் புத்தி ஏன் எனக்கு? மீண்டும் மீண்டும் எனக்கு அவனோடு பேசியவைகளும், அவனது அடிமனதில் பொதிந்திருக்கும் சோகமும், அவனது இயலாமையை தனது நண்பனுக்குச் சொல்வதுபோல் சொன்னவிதமும் எனக்கு நினைவில் வந்தன.

அது ஒரு புதன் கிழமை எனது இரவுப் பள்ளிக்கூடம் முடிந்து பஸ்ஸைப்பிடித்து அதே ஸ்ரேசனுக்கு வந்தேன். பஸ் பத்து நிமிடங்கள் தாமதித்ததால் எனது றெயினை நான் கோட்டை விட்டுவிட்டேன். அடுத்த றெயின் இன்னும் அரைமணி நேரம் என்ன செய்வது?

அந்தத் தொடர்கடைகளின் 'சோக்கேசு'களுக்குள் கண்களை மேயவிட்டு மெல்ல மெல்ல ஒரு சுற்றுச் சுற்றினால் நேரம் தெரியாமல் போய்விடும். நேரம் பத்தைத் தாண்டிவிட்டதால் சனநடமாட்டம் மிகக்குறைந்திருந்தது.

ஆங்காங்கே சிலர் 'சோக்கேசுகளை' வேடிக்கை பார்த்துக் கொண்ட ஆயாசமாக நடந்து கொண்டிருந்தனர். இன்னும் சில பிச்சைக்காரர்கள் மூலைகளில் தமது முடிச்சுக்களுடன் உறங்கிக் கொண்டிருந்தனர். நித்த குடிகாரன் ஒருவன் தூண் ஒன்றைப் பிடித்துக்கொண்டு டச்சில் ஏதோ உளறிக்கொண்டிருந்தான். இடையிடையே ஒரு பெண்ணின் பெயரைச் சொல்லி கெட்ட வார்த்தைகளினால் திட்டினான். அவனைக்கடந்து வடக்குப்பக்க வீதிக்கு இறங்கும் படிகளின் முடக்கில் இருந்த விளம்பரப் பலகையில் பிறந்த குழந்தை ஒன்றிற்கு நச்சு வாயு தாக்காமல் முகக்கவசம் போடப்பட்ட பெரிய படமொன்று காணப்பட்டது. அதன் கீழ் ஒதுக்குப்புறமாக மூன்று பேர் குந்தியிருந்தார்கள். அவர்கள் மூவரும் மிக அவசரத்தில் ஏதோ காரிய மாற்றுவதுபோல் எனக்கு ஒரு எண்ணம். ஏதாவது திருட்டோ தற்செயலாகப் பார்ப்பது போல் அடிக்கடி நோட்டம் விட்டேன். உள்ளூர ஒரு சிறு பயம்.

ஒருவன் வெள்ளிக் கடுதாசியில் வைத்து எதையோ சிகரட் லைட்டரால் சூடாக்கிக் கொண்டிருந்தான். மற்றவன் ஒரு கத்தி போன்ற ஒன்றினால் மெல்ல சேர்த்துக் கலந்து கொண்டிருந்தான். மற்றவன் சிறு கடுதாசித் துண்டுகளில் ஒன்றைச் சுருளாக்கிக் கொண்டிருந்தான். அவர்களும் சுற்றும் முற்றும் விசேடமான கவனிப்புடன்தான் காரிய மாற்றிக் கொண்டிருந்தனர். பொலிஸ் வரக்கூடும் என்ற அவசரம். அவர்களில் ஒருவன் வெள்ளையன். தலை பரட்டை அடித்துப்போய்க் கிடந்தது. மற்றவன் ஆபிரிக்க் கருப்பனாயிருக்கலாம் புலுட்டைத் தலையும் பெருத்த உதடுகளும். மற்றவன் ஆசியன் எம்மைப் போன்று, சிலவேளை சூரினாம் காரனாக இருக்கலாம். அவர்கள் தூள் பாவிப்பதற்கான ஒரு ஆயத்தத்தில் ஈடுபட்டுள்ளார்கள். உலகெங்கும் இன்று இளைஞர்களைத் தொற்றியுள்ள ஒரு பயங்கரமான பழக்கமிது. ஐரோப்பாவில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் எதிர்காலம் குறித்து கவலைப் படுகின்ற மிக முக்கியமான விடையங்களில் இதுவும் ஒன்று.




லைட்டரை வைத்திருந்த அவன் என்னை ஒரு விதமாகப் பார்த்தது எனக்கு என்னவோ போலிருந்தது. நான் சட்டெனத் திரும்பி எனது கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தேன். இன்னமும் இருபது நிமிடங்கள் உள்ளது. அவர்களைக் கவனியாமல் மறுபக்கம் திரும்பி நடந்தேன்.

இவ்வகைப் போதைப் பொருட் பாவனை ஒல்லாந்தின் பெரு நகரங்களின் மூலை முடுக்கெங்கும், பரந்து கிடக்கும் விபச்சாரப் பகுதிகளிலும் நாளாந்தம் நடந்து கொண்டுதான் உள்ளது. இந்தத் தேவைகளுக்காக பல உல்லாசப் பிரயாணிகள் ஒல்லாந்திற்கு வந்து போகிறார்கள். இவற்றுடன் அகதிகளாக வந்த இலங்கையர்களும் இவ்வகை போதைப்பொருட்பாவனைக்கும், விபச்சார விடுதிகளுக்கும், நிரந்தர மதுப்பாவனைக்கும் அடிமைகளாகி சீரழிந்திருப்பது ஒன்றும் மறைக்கப்பட வேண்டிய விடையங்களே அல்ல.

எனக்குப் பசி குடலைக் கடித்துக் கொண்டிருந்தது. திரும்பி நடந்து 'சினைக்பார்' எனும் ஒரு சிறு உணவுக் கடைக்குள் நுழைந்தேன். உருளைக்கிழங்குப் பொரியலும், 'கறிசோசும்' வேண்டிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தேன்.

எனக்கு எதிரே இருந்த ஒரு கதிரையில் ஒருவன் வந்தமர்ந்தான். அவன்... அந்த ஆசியன். அந்த மூவரில் ஒருவன்... தலைமுடி வளர்ந்து தோள்வரை கிடந்தது. ஒரு சிறு தாடியும் மீசையும். பொது நிறம். கீழே எதையோ தேடினான் சில சிறு சிகரட் துண்டுகளைப் பொறுக்கினான். பின்னர் திரும்பி என்னைப் பார்த்தான். நானும் நேரே அவனைப் பார்த்தேன். அவனுடன் கதைக்க வேண்டும் என்ற எண்ணம் எனக்குச் சற்றும் இல்லை.

அவன் "ஹலோ" என்றான்.

நானும் பதிலுக்கு "ஹலோ" சொன்னேன்.

"நீங்கள் எந்த நாட்டவன்" டச்சில் கேட்டான்.

"இலங்கையன்"

"தமிழரா?"

"ஓம்"

"நானும் தமிழன்தான்" ஒரு சிறு பதட்டத்தையும், இயல்பான சோகத்தையும் அவதானித்தேன்.

எனக்கும் கொஞ்சம் வெக்கமாக இருந்தது. சுற்றும் முற்றும் பார்த்தேன். எனககுத் தெரிந்தவர்கள் ஒருவருமில்லை.

"உருளைக்கிழங்குப் பொரியல் சாப்பிடுகிறீர்களா?"

"ஓம்" எந்த முகமனுமில்லாமல் சொன்னான்.

சாப்பிட்டுக் கொண்டே தன்னைப் பற்றிய பல விபரங்களை எனக்குச் சொன்னான்.

யாழ்ப்பாண பிரபல கல்லூரியொன்றில் ஏ.எல்..வரை படித்ததாகவும், இயக்கமொன்றுடன் இணைந்து பயிற்சிக்காக இந்தியா போனதாகவும், இயக்கமோதல்களும் உள்ளுக்குள் முரண்பட்டும், தப்பி பாகிஸ்தான் போனதாகவும், அங்கு பணநெருக்கடி பல தொல்லைகள் காரணமாக ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டதாகவும் சொன்னான். ஜேர்மனிக்குள் தூள் கொண்டு வந்த போது அங்கு பிடிபட்டு ஐந்து வருடங்கள் சிறையிலிருந்து பின்னர் நன்னடத்தையில் விடுதலை செய்யப்பட்டு கொலண்ட் வந்ததாகவும் சொன்னான். அவன் இவற்றைச் சொன்னபோது எனக்கு நம்பச் சங்கடமாகவிருந்தது. ஆயினும் இவ்வகையான பல உண்மைச் சம்பவங்கள் எனக்குத் தெரிந்திருந்தது.

(11ம் பக்கம் பார்க்க)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதுவரை தொடரும் மனிதரின் கதை?

## - GUNTER GRASS - குன்ரர் கிராஸ்

### ஜேர்மன் மொழி மூலத்திலிருந்து தமிழில்: ந.சுசீந்திரன்

பிரபல ஆங்கில நாவலாசிரியர் விலங்குப் பண்ணை George Orwell 1937ம் ஆண்டு ஸ்பானியாவில் நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் கலந்து கொண்டு திரும்பிய போது, ஸ்பானிய உள்நாட்டு யுத்தம் பற்றிய தனது விஸ்தாரமான அனுபவங்களை "Homage to Catalonia" என்ற தலைப்பில் எழுதி வைத்திருந்தார். இந்த எழுத்துப்பிரதியை லண்டனில் முதலில் எந்தப் பதிப்பகத்தாரும் வெளியிட முன்வரவில்லை. இங்கிலாந்தில் அன்று மிகவும் செல்வாக்குடனிருந்த இடதுசாரிப் புத்திஜீவிகள், Orwell இந்த நூலில் வெளிப்படுத்திய நிதர்சனங்களை ஏற்றுக் கொள்ள விரும்பாமையினால், இதனை வெளியிட விரும்பவில்லை. இந்த இடது சாரிகள் ஸ்ராலினின் அக்கிரமத்தை, அனார்கிஸ்டுக்களின், ஸ்ரொஸ்கிய வாதிகளின், தீவிர இடது சாரிகளின் மீதான ஸ்ராலினின் திட்டமிட்ட படுகொலைகளை உண்மை என்று ஏற்றுக்கொள்ள மறுத்தனர்; இந்தப் படுகொலைகளில் இருந்து ஓர்வெல் கூட மயிரிழையில் தான் உயிர்தப்பினார். Orwellஇன் மிகவும் யதார்த்தமான குற்றச்சாட்டு, "பாசிசத்திற்கெதிரான போராட்டத்தை முன் நகர்த்தும் சோவியத்நாடு" என்று காட்டப்பட்ட புனித உலகச்சித்திரத்துடன் முரண்பட்டு நின்றது. Orwellஇன் அறிக்கைகள், தாக்குதல்கள் சகிக்க முடியாத நிஜங்களாய் உலகத்தின் கனவை உடைத்தெறிந்தது.

சுமார் ஒரு வருடத்தின் பின்னரே ஒரு மிதவாதப் பதிப்பகம் இங்கிலாந்தில் இந்நூலை வெளியிட்டது; கம்யூனிச ஆட்சிநிலவிய அனைத்திடங்களிலும் ஓர்வெலின் படைப்புகள்- அவற்றோடு கம்யூனிஸ்ட்டுக்களுக்கு மத்தியில் அவர் பெற்ற கசப்பான ஸ்பானிய உண்மைகள்- அனைத்தும் சுமார் அரை நூற்றாண்டு காலமாகத் தடைசெய்யப்பட்டிருந்தது; கிழக்கு ஜேர்மனியின் பாதுகாப்பு மந்திரியாக அந்த அரசு குலையும்வரையில் பதவி வகித்த எரிஸ் மீல்க்க(Erich Mielke) ஸ்பானியப் போரில் ஈடுபட்ட முன்னணிக் கம்யூனிசப் படைத் தலைவர்களில் ஒருவர். சக போராளிகளைப் 'போடுவதன்' மூலம் களையெடுப்புக்களை நடத்தியவர்; "ஸ்பானியாவில் போராடியவர்" தான் ஆனால் அங்கு 'எப்பொழுதும் தப்பி வாழும் பதவியில்' இருந்தவர்.

புத்திஜீவிகள் எவ்வளவுதூரம் தணிக்கையின் அதிகாரிகளாகவும் அதேவேளை அதனால் பாதிக்கப்படுபவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை ஓர்வெலின் அனுபவம் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது என்பதால் இந்த உதாரணத்தை எடுத்துக்கொண்டேன். இந்தப் பிரச்னை ஒரு முடிவில்லாத நீண்ட பிரச்னை. கம்யூனிச அதிகாரத்தின் வீழ்ச்சி சொல்லி வைத்தவாறே அதன் புதிய வெற்றி நாயகனை அதிகாரத்தில் நிறுத்துகின்றது; இந்தப் புதிய நாயகர்களோ, முன்னைய அதிகாரத்தில் நடந்ததைவிட இன்னும் மோசமாக அன்று அமெரிக்காவில் 1950களில் அரச உயர் திணைக்களங்கள் கம்யூனிஸ்டுக்களினால் நிரப்பப்பட்டுள்ளதாகக் குற்றஞ் சாட்டியும், அனைத்துச் சமூக விமர்சனங்களையும் கம்யூனிசப் பின்னணி என்று விசமப்பிரச்சாரம் செய்தும் இடதுசாரிகளை வேட்டையாடிய அரசியல் வாதி மக் காதி (Mc Carthy) பாணியிலான அடக்கு முறைகளை மீண்டும் ஆரம்பித்து விடுகின்றனர்.

## வேறுபட்ட பயங்கரவாதம்

முஸ்லிம் மதவெறிப்போக்கு, அன்றைய நிலவுடமைக்காலத்துச் சட்டதிட்டங்களோடு, அதன் எச்ச சொச்சச் சித்தாந்தத்தை நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதைப்போலத் தோற்றமளித்தாலும், துருவித்துருவி ஆராயும் புத்தி படைத்த மேற்கத்தைய அரசியலமைப்புக்களும் கூட, இதைத்தான் ஆனால் வேறுபட்ட ஒரு பயங்கரவாதத்திற்கான எதிர்காலத்தையே தம் தேவையாக வேண்டிநிற்கின்றன.

* எப்பொழுது எழுதத்தொடங்கினார்களோ அன்றே எழுத்தின் மீதான தடைகளும் தொடங்கி விட்டன. அதிகாரம் என்ற வார்த்தை முதன் முதலில் உச்சரிக்கப்பட்டவுடனேயே தத்துவஞானிகளுக்கும் எழுத்தாளர்களுக்கும் நஞ்சு, தடையுத்தரவு, தணிக்கை, தலைமறைவு- வாழ்க்கை, கொலை முகாம், தனிமைச்சிறை, உயிர்போகும்வரை சித்திரவதை என்று யாவும் உறுதி செய்யப்பட்டு விட்டன.

* சொல்லின் சுதந்திரம் வேண்டி ஒரு சாராரும், எழுத்துக்கு வரையறைபோட இன்னொரு சாராரும் என்று இரு சாரார் எப்போதுமே இருந்து வருகிறார்கள். இலக்கியமும் அதனோடு அதிநெருக்கமாகப் பிணைந்திருக்கும் எதிர்க்குரலான தணிக்கை என்பதும் உள்ளவரையும் இது நடைபெறப்போகிறது.

* நன்கு கைவரப்பெற்ற தணிக்கையென்பது, ஓர் இலக்கியமறிந்த தணிக்கையாளர் ஒருவராலேயே சாத்தியப்படலாம். அதேவேளை நன்கு இலக்கியப்பரிச்சயம் உள்ள ஆனால் சிலவேளை இலக்கியத்தில் நேசமில்லாத ஒருவரால் இந்தத் தணிக்கைவேலையை மிகத்திறமாகச் செய்ய முடிவதும் சாத்தியமே. ஒரு வேளை அவர் இலக்கியப் படிவங்களைக் கைப்பற்றுவதிலும், பரீட்சிப்பதிலும், பின்னர் அதனைத் தடைசெய்வதிலும் வெறிகொண்டவராக இருந்து விட்டால் இது இன்னும் விசேடமாக நடைபெறலாம்.

பழைய நிலவுடமைச் சமூக மத்திய காலமும் (5-15.ம் நூற்றாண்டு), இன்றைய நவீன காலமும் ஒரே தன்மையில், ஒரே காலத்தில் இப்பூகோளத்தில் நடந்து கொண்டிருக்கின்றன. அன்றைய மத அதிகாரத்தின் நீதிமன்றங்களும் சிரச்சேதங்களும் செய்த வேலையை இன்று கொம்பியூட்டர்கள் சகலவிதமான தகவல்களையும் உள்வாங்குவதன் மூலம் நிவர்த்தி செய்துவிடுகின்றன.

இந்த நூற்றாண்டு, உலகஅரசியல் அரங்கில் அநேக விடயங்களில் பின்னோக்கிய வீழ்ச்சியோடு தான் முடிவுக்கு வந்திருக்கிறது. மீண்டும் ஆர்மேனியாவில் (1920 வாக்கில் நடந்ததைப்போலவே) இனப்படுகொலை; பால்க்கன் (யூக்கோஸ்லாவிய) மாநிலங்கள் தங்களுக்குள் ஏதோ திரும்பத் திரும்பச் செய்ய வேண்டும் என்ற நிர்ப்பந்தம் போல், வெட்டுக்கொத்து; மீட்டெடுக்கப்படுந்துறுவாயில், சுதந்திரம் அங்கே மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் முடக்கி விடப்படுகிறது. நாசகாரக் கொள்ளைக்கோஷ்டிகளைப்போல தேசிய வெறியர்கள், யூதஎதிர்ப்பாளர்கள், முல்லாக்கள், உயர்பீடப்பாதிரிகள், முதலாளித்துவவாதிகள்; இளம் பாசிஸ்டுக்கள், பழைய ஸ்டாலினிஸ்டுக்கள் என்று இந்தச் சபிக்கப்பட்ட நூற்றாண்டின் பிரதான பாத்திரங்கள் ஜனநாயகத்தாராளவாதத்தில் தமது ஒப்பனை அலங்கரிப்புக்களைச், சீர்திருத்தமாகக் காட்டிக் கொண்டு திரையகற்றி மேடைக்கு முண்டியடித்துக்கொள்கின்றனர்! பேச்சுச் சுதந்திரத்திற்காகக் குரல் கொடுக்கின்றனர்! ஆனால் தனித் தனியே தங்கள் தங்களுக்கான பேச்சுசுதந்திரத்திற்காக.

ஒருவர் குரலை இன்னொருவர் அடைத்துவிட எத்தனிக்கும் இந்த அநேக கூக்குரல்களினால் எனக்கு முன்னால் இருக்கும் இந்த விடயத்தைத் தாண்டி இன்னும் பலவற்றைப் பேசுவதற்கு எனக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மானுடத்தின்சுய அழிப்புக்கு இட்டுச்செல்லும் எல்லா வகை வகையறாக்களையும் பற்றிப் பேசுவதற்கு துருதுருப்பாக இருந்தாலும் இவற்றைத் தவிர்த்து, இலக்கியத்தோடு மட்டும் நின்று கொள்ளுகிறேன். இலக்கியத்தையும், அதற்கேற்படும் அவலத்தையும் பற்றிப்பேசுவதற்கு எப்பொழுதும் தேவை இருந்து கொண்டே இருக்கிறது.

எப்பொழுது எழுதத்தொடங்கினார்களோ அன்றே எழுத்தின் மீதான தடைகளும் தொடங்கி விட்டன. அதிகாரம் என்ற வார்த்தை முதன்முதலில் உச்சரிக்கப்பட்டவுடனேயே தத்துவஞானிகளுக்கும் எழுத்தாளர்களுக்கும் நஞ்சு, தடையுத்தரவு, தணிக்கை, தலைமறைவு- வாழ்க்கை, கொலைமுகாம், தனிமைச்சிறை, உயிர்போகும்வரை

## சொல்லின் சுதந்திரம்

சித்திரவதை என்று யாவும் உறுதி செய்யப்பட்டு விட்டன. இது சோக்கிரடீஸ் தொடக்கம் உலக புகலிட இலக்கியத்தின் தந்தை ஓவிட் (Ovid) வரை, கட்டுரை இலக்கியத்தைச் செழுமைப்படுத்திய பிரான்ஸ் தத்துவஞானி மொன்ரேஞ் (Montaigne) தொடக்கம் ஜேர்மனிய புரட்சிக் கவிஞர் ஹைன(Heine) வரை இங்கிலாந்துக்குத் தப்பியோடிய பிரான்சிய எழுத்தாளர் சோலா(Zola) தொடக்கம் ஸ்ராலினின் இரகசியப் பொலிசாரால் பலதடவை கைது செய்யப்பட்டும், நாடு கடத்தப்பட்டும், சைபீரியச் சிறையில் உயிர் நீத்த கவிஞர் மண்டல்ஸ்ரம்(Mandelstam) வரை, ஓர்வேல், கஃப்கா(Kafka) என்று சல்மான் றுஸ்டி வரை ஓர் முடிவற்ற காட்சி கூடமாய் நீள்கிறது.

சொல்லின் சுதந்திரம் வேண்டி ஒரு சாராரும், எழுத்துக்கு வரையறைபோட இன்னொரு சாராரும் என்று இரு சாரார் எப்போதுமே இருந்து வருகிறார்கள். இலக்கியமும் அதனோடு அதிநெருக்கமாகப் பிணைந்திருக்கும் எதிர்க்குரலான தணிக்கை என்பதும் உள்ளவரையும் இது நடைபெறப்போகிறது. எப்போதுமே இலக்கியத்தினதும் அதன் மீதான தடையினதும் இணைந்த போக்கானது, இதில் யார் எழுதி யார் தடைசெய்கிறார் என்பதில் தங்கியிருப்பதில்லை. ஏனெனில் தணிக்கை செய்பவன் மூலமே, தமது வாழ்க்கையைக் குறிப்பிட்ட காலம் வரை ஓட்டிய பிரபல பத்திரிகையாளர்கள்,எழுத்தாளர்களின் பட்டியல் ஒன்று இருக்கவே இருக்கிறது. ஒருவர் எழுத இன்னொருவர் தடைசெய்வதென்பது, அது எப்போதும் போலவே இன்னும் தொடர்கிறது. அரசியற் காற்று எதிர்ப்பக்கமாக மாறி வீசிவிட்ட அண்மைக்காலம் வரை எழுத்துக்குத் தடைவிதிப்பதில் தமது சம்பாத்தியத்தைப் பெற்றுக்கொண்டவர்கள் பலர். இன்றைய இந்த அனுபவ சாட்சியங்களிலிருந்து நாம் கீழ்வரும் முடிவுக்கு வரலாம்:

நன்கு கைவரப்பெற்ற தணிக்கையென்பது, ஓர் இலக்கியமறிந்த தணிக்கையாளர் ஒருவராலேயே சாத்தியப்படலாம். அதேவேளை நன்கு இலக்கியப்பரிச்சயம் உள்ள ஆனால் சிலவேளைஇலக்கியத்தில் நேசமில்லாத ஒருவரால் இந்தத் தணிக்கைவேலையை மிகத்திறமாகச் செய்யமுடிவதும் சாத்தியமே. ஒரு வேளை அவர் இலக்கியப் படிவங்களை கைப்பற்றுவதிலும், பரீட்சிப்பதிலும், பின்னர் அதனைத் தடை செய்வதிலும் வெறிகொண்டவராக இருந்து விட்டால் இது இன்னும் விசேடமாக நடைபெறலாம்.

இந்தத் தணிக்கை ஓர் உயர் ரகமான அதாவது தணிக்கையாளர் பதிப்பாசிரியராக இருந்தும் நடாத்தப்படலாம். ஜேர்மனியில் நாடெங்கிலும் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறியின்போது "ஆபத்தான இலக்கியங்கள்" என்று அடையாளம் காணப்பட்டவற்றை அழிப்பதற்கு இதுபோன்றதும், இதனையும் விஞ்சக்கூடியதுமான நிகழ்ச்சிகள் நடை கொள்ளப்பட்டதை ஜேர்மனியில் இருப்பவர்கள் தெரிந்திருப்பர். இதற்கும் மேலாக எனது ஜேர்மன் நாடு பகிரங்கமாகப் புத்தகங்களுக்குத் தீ வைத்த நாடு. அதன்பின்னர் எழுதியதெதுவும் அச்சிடக்கூடாது என்பது மட்டுமல்ல, மௌனமாக்கப்பட்ட படைப்பாளிகள் மீது அட்டூழியங்களும் அவர்களைத் துன்புறுத்தின. நாசிகளால் கொலை முகாமில் கொல்லப்பட்ட எறிக் மூஸாம் (Erich Muegsam) தீவிர பத்திரிகையாளன்; 1935இல் சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்றும், வதைமுகாமின் சித்திரவதைகளினால் கொல்லப்பட்ட கார்ல் பொன் ஓசியெற்ஸ்கி (Carl von Ossietzky) என்ற படைப்பாளிகளை எண்ணிப்பார்க்கிறேன். பெரும்பாலானோருக்கு புகலிடம் மட்டுமே கைகொடுத்தது. புகலிடமென்பது நாடு நாடாக ஓடுவது அல்லது தற்கொலையிடம் தஞ்சம் புகுவது. புகலிடத்தில் தற்கொலை செய்து கொண்ட இலக்கிய விமர்சகரும், பிராங்போட் சிந்தனைப்பள்ளியின் நவீன சிந்தனையாளர்களில் ஒருவருமான வால்ரர் பென்ஜமீனை (Walter Benjamin) இந்த இடத்தில் நினைவு கூருவம். மக்கள் பேசும் மொழியின் ஓசையைக் கேட்டும்; அவர்கள் உதடுகளின் அசைவைப் பார்த்தும்;பேசும் மொழியோடும், அதன் இயல்போடும், வாழ்ந்த சூழலோடும் இரண்டறக் கலந்தவர்களான எழுத்தாளர்கள் என்ற கலைஞர்களின் அனுபவங்கள் இன்னும் கசப்பானவை. புலம் பெயர்ந்தபோது அவர்களால் மேற்கொண்டு எழுத முடியவில்லை. எழுத்து வாழ்க்கை, எழுத்தாளன் என்பது குறுகிப் போனது. ஒருவன் எவ்வளவு காலத்திற்குத்தான் மொழியைத் தன்னுட் தேக்கி வைக்க முடியும்? எவ்வளவு புத்தகங்களால் அவன் மொழியின் நினைவுகளை உள்ளபடி மீட்டு வர முடிகிறது?

## புகலிட இலக்கியம்

ஜேர்மன் இலக்கிய வரலாற்றில் ஒருபுறம் எதனோடும் சமப்படுத்த முடியாத மறுபுறம் இணைக்கமுடியாத முறிவாக அமைந்து விட்ட புகலிட இலக்கியம் இவ்வாறு தான் உருவாகின்றது. தோமஸ் மான் Thomas Mann(1875-1955) 1933இல் ஜேர்மனை விட்டு பிரான்ஸ், சுவிற்சலாந்து, இறுதியில் அமெரிக்காவில் குடியேறினார். புலம் பெயர்ந்த எழுத்தாளர்களின் சர்வதேசப் பேச்சாளர்; 1929இல் இலக்கியத்துக்கான நோபல் பரிசு; ஜேர்மன் இலக்கியத்திற்கு அசாதாரண, புதிய பரிமாண புகலிட நாவல்கள் எழுதினார். ஹென்றிச் மான் Heinrich Mann (1871-1950) தோமஸ் மானின் தமையனார். பிரஸ்ஸிய கலைக்கல்லூரியின் முதல்வர்; 1933இல் ஜேர்மன் குடியுரிமை பறிக்கப்பட்ட பின்னர் பிரான்ஸ், அமெரிக்காவில் நாசிகளுக்கு எதிரான தீவிர எதிர்ப்பாளர். சிறந்த நாவலாசிரியர்.

அல்பிரட் டொப்லின்(Alfred Doblin) 1933இல் வரைபேர்லினில் முளை வைத்தியர். 1933 இவருடைய நூல்கள் தடைசெய்யப்பட்டன. சிறந்த நாவலாசிரியர். பிரான்ஸ், அமெரிக்காவில் புகலிடம்.

றொபேட் முசில்(Robert Musil) (1880-1942)ஆஸ்திரிய நாவலாசிரியர்; சுவிற்சலாந்தில் அரசியல் தஞ்சம்.

இவர்கள், இவர்களின் படைப்புக்கள் புகலிடம் என்ற தழும்பைத் தாங்கி நிற்கிற போதும் இன்றுவரை அங்கியமாக்கப்பட்டே உள்ளன.

அழைக்கப்படாத விருந்தாளிகளாக புலம்பெயர்ந்த எழுத்தாளர்கள் ஜேர்மனிக்குத் திரும்பியபோது, அங்கேயும் இங்கேயுமாகத் துண்டாடப்பட்ட நாட்டில், அந்தந்த நாட்டின் அரசியலமைப்புக்கு ஏற்றவாறு வாழ வேண்டியிருந்தது. தடையிலும் தணிக்கையிலும் இவர்கள் ஏற்கனவே துன்பப்பட்டிருந்த போதும் நாடு திரும்பிய இவர்களிற் சிலர், புதியமுறையிலான அல்லது ஏலவே அறிமுகமாகிப் போயிருந்த திணிப்புக்கும் பலாத்காரத்திற்கும் பலியாகிப் போனார்கள். இலக்கியங்கள் மீது தணிக்கை- தடை எனும் கட்டுப்பாடு கட்சிசார்பு ரீதியாக அல்லது வர்க்கப்போராட்ட ரீதியாக நியாயப்படுத்தப்பட்ட போது தணிக்கையின் தலைமீட்டை இவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருந்தார்கள். இந்த முரண்பட்ட நிலைப்பாடுகளுக்கு (Bertolt Bre cht(1898-1956) உலகப்புகழ் பெற்ற நாடகாசிரியர், கவிஞர்; புகலிடம் தேடி உலகின் பல்வேறு நாடுகள்.

Anna Seghers(1900-1983) முற்போக்கு எழுத்தாளர்; 1933இல் மெக்சிக்கோவில் அரசியற் தஞ்சம், புலப்பெயர்வு வாழ்வில் பரவலான பாசிச எதிர்ப்பு நடவடிக்கைகள். -இந்த இருவரையும் உதாரணமாகக் காட்டலாம்.

ஜேர்மன் மொழியின் வரையறையற்ற (கட்டற்ற) கற்பனை இலக்கியக் காலத்தை(Romantic) நோக்கினால் இவர்கள் முன்னோடிகள் அங்கேயும் இருக்கிறார்கள் என்றாலும் அதன் மூலம் இவர்கள் தாங்கள் செய்ததற்குச் சமாதானம் தேடிக்கொள்ள முடியாது. Friedrich Schlegel(பிரீட்றிஸ் ஸ்லேகல்) 1772-1829; ஜேர்மன் இலக்கிய விமர்சகர்; கற்பனை இலக்கிய முன்னோடி.

Clemens Von Brentano (க்ளெமென்ஸ் பொன் பிறென்ரானோ) 1778-1842; கவிஞர்; நாவல் இலக்கிய முன்னோடி.

இலக்கியப் புகழ் பெற்ற இந்த இருவரும் 18ம் நூற்றாண்டின் இறுதியில் 1809 தொடக்கம் 1848வரை நிலவிய ஆஸ்திரிய Metternichஆட்சிக்கு உளவாளிகளாக, தணிக்கையாளர்களாக மிகவும் ஆர்வத்தோடு, மனம் வைத்துச் செயற்பட்டிருக்கின்றனர். இவர்களா இப்படி இருந்தார்கள் என்று இன்னமும் கேட்டுக்கொண்டிருக்கிறோம். தெளிவற்ற ஒரு இலக்கியப் பாரம்பரியம், அது இன்றைய நிகழ்கால இழுபறிகள் வரை நிழலாகத் தொடர்வதை எடுத்துக் காட்டவே இந்த உதாரணங்களை நான் இங்கே எடுத்துக் கொண்டேன்.

(இக் கட்டுரையின் இறுதிப்பகுதி அடுத்த இதழில்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 2 சொல்லாரம்

திருவரங்கன்

டிசம்பர் 3ந் தேதிக்கு முன் கிடைக்கும் விடைகளில் முதலாவதாக எடுக்கப்படும் சரியான விடைக்கு

**பரிசு 20பவுண்கள்**

## இடமிருந்து வலம்:

1. அதிகமாகப் பாடப்படாத ராகத்தை இப்படி அழைப்பார்கள்- பாடல்: "அதிசயராகம் ஆனந்தராகம் அழகியராகம் இது".(7)
6. கல்லறை- இறந்தவர்கள் இறுதியாக அடக்கம் செய்யப்படும் இடம்.(3)
7. பொழுது புலரும் நேரம்.(2)
9. முகம்- "இது சந்திரபிம்பமோ மலர்ந்த சரோஜமோ" என்பது பாடல்.(4)
10. பிணம் வாய் திறப்பது.(3)
12. பஞ்சரத்ன ராகங்களில் ஒன்று- இசை பயில்பவர்களுக்குக் தெரியும் இது.(3)
14. அதிர்ஷ்டம் என்பார்கள்.(3)
15. நாயகன் நாயகியிடம் கொள்வது.(3)
17. சுவைக்கு இன்னொரு பெயர்- அதே நேரத்தில் கொத்தமல்லி- மிளகு போன்றவை வைத்து ஆக்கும் திரவம்.(3)
18. 4 மேலிருந்து கீழ் கதாநாயகனாகும் காவியம்.(5)

## வலமிருந்து இடம்:


8. இருக்கும் இது தெரிந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே- பாடல் பரமசிவன் கழுத்திலிருந்து படம்: சூரியகாந்தி.(3)
11. காலம்- இது நன்றாக இருந்தால் எல்லாம் நடக்கும் என்பார்கள்.(2)

## மேலிருந்து கீழ்:

2. குரங்கின் கையில் இருப்பது- பழமொழி.(3)
3. இயற்கையின் நான்கு பருவங்களில் ஒன்று.(5)
4. அனுமான் தினம் சொல்லும் நாமம்.(2)
5. நீயே இது என்று இறைவனிடம் சரண் புகுவார்கள்.(2)
8. இயற்கையின் இடைப்பருவம்- "இணைந்தோங்கி நிற்கும்போது- இதை அன்றி எண்ணம் ஏது இது காலம் 3 மேலிருந்து கீழ் "என்பது" ராமனின் மோகனம் பாடல் படம்: நெற்றிக்கண்.(5)
9. தமிழர் அறிமுகம் ஆகும்போது கூறுவது.(5)
14. சிந்தனை- அதே நேரத்தில் தூரத்தையும் குறிப்பிடுவார்கள்.(3)
16. தடவை என்பார்கள்- பொன்னால் செய்தவை இது குன்றாதவை என்பார்கள்.(3)

## கீழிலிருந்து மேல்:

13. இது இல்லாமல் பாடல் இல்லை- வார்த்தைகள், இசை அல்ல.(3)
15. கழுத்தில் கபால மாலையும், திரிசூலமும் கையில் கொண்ட பெண் தெய்வம்.(2)
19. இந்த மிருகத்தின் தோலில்தான் துறவி- சந்நியாசிகள் தவம் இருப்பார்கள்.(2)




உங்கள் முகவரி

பெயர்.................................
முகவரி ..............................
.....................................
.....................................
தொலைபேசி..........................

**பதில் அனுப்பவேண்டிய முகவரி**

சொல்லாரம் – 2
THAMIZHOSAI
253, Western Avenue
**London W3 0PP**

# வாரபலன்

-வனவாஸி-

### மேடம்

உங்கள் முயற்சிகள் அனைத்தும் வீணாகும். தவறான முடிவெடுத்து தவிப்பீர்கள். பிறரிடம் கோபப்பட வாய்ப்புண்டு.நல்ல பெயரும் பாழாகும். தீய சகவாஸம் ஏற்படலாம். முன் ஜாக்கிரதை அவசியம். வேண்டியவரே ஏமாற்ற நினைப்பர். நீர் இறைவனையும் பழிப்பீர். உடம்பில் காயம்பட வாய்ப்புண்டு. பிரச்னையான வாரம் இது.

### இடபம்

கடிதம் வரும் கனிவான செய்திகளை தாங்கி, தொடர்ந்து செலவும் வரும் கல்யாண காரியமாக. வேலை அதிகம் தான். கூடவே சந்தோஷமும் தானே. உடம்பையும் அடிக்கடி கவனியுங்கள். மருத்துவர் கை உடம்பில் படலாம். பொதுவாக சுமாரான வாரம் தான்.

### மிதுனம்

உங்களுக்கென்ன குறை. சொன்னதை செய்து காட்டினீர்கள். அதற்கு புகழும் பெருமையும் பெறுவீர்கள். திருஷ்டி சுற்றி போடுவது நல்லது. வெற்றி பெருமிதப்பில் உதவி புரிந்தவர்களை மறக்காதீர்கள். சிலருக்கு பிரயாணங்கள் நன்மை தரும். பொதுவில் இது ஒரு நல்ல வாரமே.

### கர்க்கடகம்

தோல்விகளினால் துவண்டிருந்த உங்களுக்கு புத்துணர்ச்சி பிறக்கும். புதிய முயற்சிகள் கைகூடும். பிரிந்தவர் கூடுவர். தொழில் துறையிலும் லாபம் உண்டு. படிப்பில் முன்னேற்றம் தெரியும். வாரக் கடைசியில் வியப்பாக அனுபவம் ஏற்படும். முன்னேற்றமான வாரமே இது.

### சிங்கம்

ஊருக்கு உபதேசம் செய்பவர்களுக்கு தனக்கு வந்தால் தான் கஷ்டம் புரியுமாம். உங்களுக்கு வந்திருக்கிறது. கவனமாக ஆராய்ந்த செயல் பட்டால் எளிதில் பிரச்னை தீரும். பலபேர் சொல் கேட்டீர்களோ பாடு திண்டாட்டம் தான். சொல் பேச்சு கேட்காத உங்களுக்கு ஆண்டவன் விட்டதுதான் வழி. மிகவும் குழப்பமான வாரம்.

### கன்னி

அப்பாடா! பிரச்னைகள் தீர்ந்தது. பொருளாதாரமும் பரவாயில்லை. இருக்க இடமும் கிடைக்கலாம். இன்பத்திற்கும் பஞ்சமில்லை. உடல் ஆரோக்கியம் தான் சரியில்லை கவனம் தேவை. வாரக்கடைசியில் கடன் வாங்க நேரிடலாம். கஷ்டமான செய்திகள் தாங்கி கடிதங்களும் வரலாம். பொதுவாக இதமான வாரமே இது.

### துலாம்

வார்த்தைகளை அளந்த பேசுவது நல்லது. மௌன விரதம் அதைவிட நல்லது. நண்பர்கள் என்ன தாய் தந்தையரிடமே எதிர்த்து பேசுவீர்கள். (கணவன் மனைவி உட்பட) சிலர் நீதிமன்றம் ஏறலாம். ஆனாலும் நியாயம் உங்கள் பக்கமே. படிப்பில் குழப்பமும் பந்தயத்தில் தோல்வியும் இந்த வாரச் சிறப்பு பலன்கள். பொதுவில் கவனமாக இருக்கவும்.

### விருச்சிகம்

வெகு நாட்களாக போட்ட திட்டம் கை கூடிவரும். ஆனாலும் பொறுமையை சோதித்து தான் நடக்கும். கைவிட வேண்டாம். சோம்பலை விட்டு துணிந்து செயல் படுங்கள். வெற்றி உமதே. நல்ல நேரத்தில் நண்பர்கள உதவுவார்கள். (நண்பிகளும்) தாய் தந்தை புண்ணியமும் கை கொடுக்கும். நல்ல முற்போக்கான வாரம்தான் இது.

### தனு

கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை. ஏமாற்றம் தான் என்ன செய்வது. தோள் கொடுக்க துணை விரைவில் வரும். துவள வேண்டும். பொதுச்சேவை நல்லதுதான். பெயரைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். எதிர்பார்த்த உதவி தாமதமாக கிடைக்கும். பொதுவாக இது ஒரு சோதனையான காலமே.

### மகரம்

சென்ற வாரம் பிரகாசமாக சிரித்த நீங்கள் இந்த வாரம் ஏன் இப்படி? காலத்தின் கோளாறுதான். எதையும் விட்டே பிடியுங்கள். தானாக வளைந்து வரும். வேலைகளில் அதிக கவனம் தேவை. இழக்க நேரிடலாம். படிப்பும் அப்படியே. மரியாதை போனாலும் மனதை தளர விடாதீர்கள். இந்த நேரம் தளர்ச்சியான வாரமே.

### கும்பம்

சென்ற வாரம் போலவே அதிர்ஷ்டக்காற்று தொடர்ந்து வீசும். பயன்படுத்த தயங்காதீர்கள். வாரக் கடைசியில் சிக்கல்கள் வரலாம். முன்யோசனை பயன்தரும். மூத்தவர் சொல் கேட்டல் நலம். மனைவி வழி லாபம் உண்டு.மிதமான வாரம் தான் இது.

### மீனம்

என்ன இது திடீர் பணப்புழக்கம் உங்களுக்கேஅ திசயம் தான். ஆனால் அடுத்த வாரம் நிலைக்குமா? சந்தேகம் தான். நிதானமாக இருங்கள் எதிலுமே. பணம் கொடுத்தவர் பலனை எதிர்பார்க்கலாம். நல்ல மரியாதை கிடைக்கும் மனைவியிடம் கூட. புது அனுபவங்கள் ஏற்படலாம். நல்ல சிந்தனைக்குரிய வாரமிது.

# லண்டன் நிகழ்வுகள்....

நவம்பர் 21 சனி
நண்பகல் 12.00மணி
அகதிகள் சட்ட மூலத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டம். அகதிகள் உரிமைக்கான தற்காலிக அமைப்பான RAHCAR இதனை ஒழுங்கு செய்துள்ளது.

ஆரம்பிக்கும் இடம்: **Hyde Park**

முடிவடையும் இடம்: **Trafalgar Square**

விபரங்கட்கு: 081 748 6682; 071 738 6408 / 251 5675

நவம்பர் 21 சனி
மாலை 7.00மணி
பரத நாட்டிய அரங்கேற்றம் செல்வி.பிறிசில்லா நீலம்

இடம்: **Acton Town Hall**
**High Street, Acton W3**
விபரங்கட்கு: 081 204 1835

நவம்பர் 28 சனி
மாலை 7.00மணி
ஷேக்ஸ்பியர் நடனக் கல்லூரி அளிக்கும் நடன நிகழ்ச்சி. நிருத்தப் பெரியார் வெங்கடாசலபதியும் அவரது சிஷ்யை ஷேனிகா ஷேக்ஸ்பியரும்.

இடம்: **Claremont High School**
**Claremont Avenue**
**Kenton Harrow**
**Middlesex.**
விபரங்கட்கு: 081 951 0594

நவம்பர் 28 சனி
மாலை 6.30மணி
மட்டு. பல்கலைக்கழக அபிவிருத்தி சபை (BUDS)யின் ஒன்றுகூடலும் இராப்போசனமும்.

இடம்: **Alperton High School**
**Ealing Road**
**Wembley**
விபரங்கட்கு: 081 886 7530
081 561 7629

நவம்பர் 29 ஞாயிறு
மாலை 5.30 மணி
மாவீரர் தினம்

இடம்: **Walthamstow Assembly Hall**
**Forest Road**
**London E17**

டிசம்பர் 4 வெள்ளி
மாலை 7.30 மணி
நிருத்தப் பெரியார் ஸ்ரீ.ஜே. வெங்கடசலாபதி, செல்வி.லூட்மிலா வின்டலன் உடன் இணைந்து அளிக்கும் பரதநாட்டிய நிகழ்ச்சி.

இடம்: **Surbiton Assembly Hall**
**Maple Road, Surbiton,**
**Surrey.**
விபரங்கட்கு: 081 769 6297
081 677 5497

டிசம்பர் 6 ஞாயிறு
மாலை 5.45 மணி
தமிழ் அநாதைகள் அறக்கட்டளை நிதி திரட்டலுக்காக, நிருத்தப் பெரியாரும் வெங்கடசலாபதி- அவரது மாணவி ஷேனிகா ஷேக்ஸ்பியருடன் இணைந்து வழங்கும் நடன நிகழ்ச்சி

இடம்: **Ealing Town Hall**
**Uxbridge Road,**
**london W5**
விபரங்கட்கு: 081 908 3540
081 422 0012

**இப்பகுதியில் தங்கள் "நிகழ்ச்சிகளை பிரசுரிக்க" விரும்பும், ஸ்தாபனங்கள் எமக்கு விபரங்களை அனுப்பி வைக்கவும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## லண்டனில்...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் அதை செய்யும் விதமும் லண்டனில் பிறந்து வளர்ந்த பிள்ளைகள் அபிநயிப்பதும் மிகவும் வித்தியாசமாக இருக்கிறது. உதாரணமாக, வெட்கம் அல்லது சிருங்காரம் போன்ற பாவத்தை நாம் கற்பிக்கும் போது லண்டன் பிள்ளைகளில் பெரும்பாலான பிள்ளைகள், அதை தத்ரூபமாக அபிநயிக்க சிறிது சிரமப்படுகிறார்கள். ஏனெனில் அந்தந்த உணர்ச்சிகளை அவர்கள் வெளிக்கொண்டு வரும் விதம் வேறு. அந்த சந்தர்ப்பங்களில் மிக மிக உன்னிப்பாகவும் நுணுக்கமாகவும் அவர்களுக்கு அந்த பாவத்தைக் காட்ட நாங்கள் -ஆசிரியர்கள்- முயல வேண்டும். முதலில் அந்த உணர்ச்சிகளை அவர்களை அனுபவிக்கப் பண்ணி பின் அதனை முகத்திலும் உடம்பிலும் காட்ட பண்ண வேண்டும். இவற்றை நாம் மாணவர்க்கு கற்பிக்கும் போது, அவர்கள் எமது கலாச்சாரத்தையும் சிறிது சிறிதாக விளங்கத் தொடங்குகிறார்கள். நாட்டியமாடும் மாணவர்கள் முதலில் அனுசரிக்க வேண்டிய இன்னொரு முக்கிய விஷயம் அவர்களது தோற்றம், அதாவது உடை. Jeansம், Tea Shirtம் அணிந்து மாணவர்கள் நாட்டியம் ஆடுவதை ஆதரிப்பது பிழை. நாட்டியம் பயிலும் மாணவர் அணியும் உடைகள் உள்ளன. உதாரணமாக பைஜாமாவும், கம்மிஸும். அவற்றை அவர்கள் அணிந்து ஆடும்போது அவர்களுக்கு இலகுவாக அங்க அசைவுகளை செய்ய முடிகிறது. அத்துடன் தலைமயிரை நெற்றியில் தொங்கவிட்டு, பல மாணவர்கள் வகுப்புக்கு வருவதுண்டு. நெற்றியசைவுகளோ முகபாவங்களோ எதுவும் இதனால் தெரிவதில்லை. இவற்றை அவர்களுக்கு விளக்கி, நடனமாடும் போதாவது அவர்கள் தங்கள் தோற்றத்தில் கவனம் செலுத்தப் பண்ண வேண்டும்.

லண்டனில் பக்க வாத்தியகாரர் அநேகமாக வேறு வேலைகளும் செய்கிறார்கள. மற்றும் ஒவ்வொருவரும் வெகு தொலைவில் வசிப்பதால் நேரத்திற்கு ஒத்திகைக்கு வருவது அவர்களுக்கு கஷ்டமான ஒரு விஷயம். எல்லோரையும் ஒன்றாக சேர்த்து ஒத்திகை பார்ப்பது மிகக் கடினம்.அத்துடன் மண்டபம் ஒழுங்கு பண்ணுவதும் எளிதில் செய்ய முடியாது.

இந்த பிரச்னைகளுக்குள் எல்லாம், நாம் திருப்தியும் சந்தோஷமும் படவேண்டிய விஷயம் என்னவென்றால், லண்டனில் 10, 15 வருடங்களுக்கு முன்னிருந்த கலாச்சார உணர்வைவிட தற்போது வெகுவாக எமது கலை நிகழ்ச்சிகளின் தரமும் கலாச்சாரமும் முன்னேறியுள்ளது. லண்டனில் உள்ள மாணவரும் மிகவும் முயற்சியும் ஆர்வமும் கொண்டவர் ஆகையால், அவர்களுக்கு பல பிரச்னைகளுக்கிடையிலும் இந்த புனிதமான நாட்டியக் கலையை சொல்லிக் கொடுப்பது ஆசிரியர்களுக்கு ஒரு திருப்தியையும் சந்தோஷத்தையும் கொடுக்கிறது.

## கடற்படை தளபதி..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிநாட்டவர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்காக கையாளப் பட்ட ஒரு யுக்தியாகும். இந்த கண் காட்சிக்கு நாற்பத்தைந்து நாடுகளில் இருந்து இரண்டா யிரத்துக்கும் அதிகமானவர்கள் விஜயம் செய்வார்கள் என எதிர் பார்க்கப்பட்டது.

தாஜ் சமுத்திரா ஹோட்டலில் தங்கியிருந்த நியூசிலந்து கிரிக்கட் அணியில் மேலதிகமானோர் 17ம் தேதி ஆரம்பிக்க இருந்த போட்டிகளை ரத்துச் செய்துவிட்டு நாடு திரும்ப விண்ணப்பித்திருக்கிறார்கள். நியூசிலந்து கிரிக்கட் சபையின் முதல்வர் கொழும்பு வந்து அணியினருடன் பேச்சு வார்த்தை நடத்தினார். ஐந்து கிரிக்கட் வீரர்கள் நியூசிலந்து திரும்பிய போதிலும், இந்த கிரிக்கட் போட்டிகள் தொடரும் என நம்பப்படுகிறது. 1987ம் ஆண்டும் இவர்கள் ஒரேயொரு போட்டி முடிந்த பின்பு புறக் கோட்டை பஸ் நிலையத்தில் வெடித்த குண்டினால் 113 பேர் கொல்லப்பட்டதும் நாடு திரும்பினார்கள்.

இங்கிலாந்து அணியும் இரண்டு கிழமைகள் இங்கு விஜயம் செய்ய இருந்தது. இவர்களது விஜயம் இரத்து செய்யப்படலாம் என நம்பப்படுகிறது.

நேற்றைய தினம் கொழும்பில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கிளன்சி பெர்னாண்டோவின் மரணச் சடங்குகள் எவ்வித தடங்கலுமின்றி நடந்தேறின.

## ஒரு வீதிக்கு....

(8ம் பக்கத் தொடர்ச்சி)

தனது குடும்பத்துடன் பல வருடங்களாகத் தொடர்புகள் இல்லை என்றும், தகப்பன் ஒரு ஓய்வு பெற்ற ஆசிரியர்என்றும், இரண்டு அக்காக்களும் ஒரு தம்பியும் ஊரில் இருந்ததாகவும் சொன்னான்.

"ஏன் நீங்கள் இவற்றை விட்டு விட்டு வேறேதும் செய்யலாமே"

"செய்யலாம்தான்" என்றான்.

தேவையில்லாமல் "அட்வைஸ்' பண்ணுவதாக நினைக்கக் கூடாத மாதிரி நானும் கதைத்தேன். தான் இலங்கை போக முடியாதுள்ளதாகவே வருந்திக் கொண்டான்.

"இங்கு அசேலைப் பதிந்து வாழலாமே" என்றும் சொல்லிப் பார்த்தேன்.

எதற்கும் எதிர்ப்பில்லாமல் - கேட்டுக் கொண்டான்.

யாரும் கேட்டுக்கொண்டிருந்தால் நீங்கள் 'அட்வைஸ்' பண்ணுவது போல சொல்லிக் கொண்டேயிருப்பீர்கள் என்று என் மனைவி அடிக்கடி சொல்லுவது ஞாபகத்திற்கு வந்தது.

பின்னர் அவனது நண்பனான கறுப்பன் வந்து அவனை அழைத்தான்.

"பிறகு சந்திப்பம்" என்று சொல்லிப் புறப்பட்டான்.

அதற்குப்பின் அந்த நெருக்கமான நகரத்தில் இரண்டோ மூன்று தடவைகள் அவனைக் கண்டேன். அதே அவனது நண்பர்களுடன்.

அதன் பின்னர் இன்று.

-நன்றி: அ.ஆ.இ.

## இணைப்பு இழுபறி

வடக்கு, கிழக்கு இணைப்பை அடிப்படையாகக்கொண்டு 7 தமிழ்க் கட்சிகள் முன்வைக்கும் யோசினையை அரசு நிராகரித்தால், அதிலும் குறைவான யோசனைக்கு விடுதலைப் புலிகளை இணங்க வைப்பது சாத்தியப்படுமா என- யாழ்- மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நவரத்தினம் பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பியுள்ளார். தனியான கிழக்கு மாகாணத்தில், சிங்களவர்களும், முஸ்லீம்களும், தமிழர்களுடன் ஐக்கியமாக வாழ முடியுமானால், இணைந்த வட, கிழக்கு மாகாணத்தில் இவ்விதம் ஐக்கியமாக ஏன் வாழ முடியாது? வடக்கும், கிழக்கும் இணைந்து வெளிநாடொன்றுடன் இணைந்து விடும் என்று அரசு அஞ்சுகிறதா என்றும் கேட்ட அவர், இணைந்த மாகாண ஒரு தீர்வை- பெரும்பான்மை இனக்கட்சிகளும், ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டால் இனப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும் என அறிவுறுத்தியுள்ளார்.




உலகப்பிரசித்தி பெற்ற
யாழ்ப்பாணத்து சோதிட பண்டிதர்
டாக்டர் கே.என்.நவரத்தினம்
M.A.F.A.S.A.A
* சாதகம்
* எண்சோதிடம்
* கைரேகை சாஸ்திரம்
ஆகியவற்றில் டிசம்பர் முதல் வாரம் வரை
லண்டனில் நேரடியாக ஆலோசனை வழங்குவார்.
தொடர்புகளுக்கு: 081-571 2104
நிரந்தர முகவரி 9, SAFFRON DRIVE,HALLAM 3803
VICTORIA, AUSTRALIA
TEL: (03) 796 3964 , (03) 796 4062







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


# SHANKAR

## நத்தார், புதுவருட, பொங்கல்

பண்டிகைகளை முன்னிட்டு

**01-12-1992 முதல் 15-01-1993 வரை**

விஷேட

# மலிவு விற்பனை

தமிழ்த்திரைப்பட **AUDIO, CD** ஆகியன
மொத்த விற்பனை விலையில்

அத்துடன்

## இலங்கைத் தயாரிப்புகள்

பதனிடப்பட்ட மீன் வகைகள், மரக்கறி வகைகள், அரிசி மா,
மிளகாய்த்தூள், சகலவிதமான பலசரக்குப் பொருட்கள்

என்பவற்றுக்கு

## லண்டனில் நாடவேண்டிய ஒரே இடம்

# SHANKAR & CO LTD

231 NORTHOLT ROAD, SOUTH HARROW, MIDDLESEX, U.K.

PHONE: 081 426 8960 FAX: 081-861 5248


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்